தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 2 | சென்னை | 21—2—56 | செவ்வாய்க்கிழமை | இதழ் 36

ஆசைப்பட்டுப் புல் பூண்டை வளர்ப்பதுவும் ஆகாத காரியம் என்ருகிவிடும் ஆவடிப் பொட்டல் வெளியையும், ஐந்து நதிகள் ஒருங்கே பாய்ந்து பொன் கொழிக்கும் பூமியாக விளங் தம் அமிர்தசரஸ் வளமிக்க மண்ணையும் ஒப்பிட்டுப் பேசுவதே 'ரசனை' குறைவான விவகாரந் தான். ஆனல், ஆவடியும் அமிர்தசரசும் நாட்டு வரலாற்றிலே கடுமையான இடத்தைப் பிடித்துக்கொண்டிருக்கின்றன வென்பதை நினைத்துப் பார்க்கும் தோறும் இரண்டையும் இணைத்துப் பார்ப்பதுவும் அவசியமாகப் படுகிறது.

ஆவடிக் காங்கிரசிலே 'ராஜ பார்ட்' வகித்து அப்லார் சிலரையும் பிரமிக்க வைத்த கதா பாத்திரங்கள், அமிர்தசரசில் தனித் தனிப் பாத்திரங்களின் தன்மைகளை வீசி எறிந்து, ஒரே வேஷத்தில் காட்சியளித்து 'டேரா' வையே நஷ்டக் கணக்குக்கு விட்டுவிட்ட பரிதாப சம்பவம் உலகத்தில் தோன்றிய ஒரு சில அதிசய சம்பவங்களில் ஒன்றெனச்சொன்னல், அது மிகைபடச் சொல்வதல்ல.

அவரவர் எடுத்துக்கொண்ட பாத்திரத்தைக் கனகச்சிதமாக நடித்து முடிக்க ஆவடியில் கையாண்ட உற்சாகம் அமிர்தசரசில் ஒடிப் பதுங்கி, எல்லோரும் ஒரே ஓர் வேஷத்தைக் கட்டி ஆடுவதிலேயே குறி வைத்திருந்த சேதி உலகுக்கு ஆராய்ச்சிக்குரிய விஷயமாகிவிட்டிருக்கிறது.

'ராஜபார்ட்' வகித்துவந்த - வகித்து வரவேண்டியவர் என்று மக்கள் முடிவுகட்டி விட்டிருக்கிற 'படே' பேர்வழிகள்கூட, நாய் வேஷம் போட்டுக் குலைப்பதில்தான் பெரும் பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கின்றனர்.

எல்லோரும் வெறி நாய் வேஷம் போட்டு, வேண்டிய மட்டும் குலைத்துக் கலைந்துவிட்டிருக்கின்றனர்.

ஆவடியிலே பேசப்பட்ட பஞ்சசீலக் கொள்கைகளின் பிரமாத சாதனைகள், பஞ்சநதி ஓடும் பஞ்சாப் மண்ணிலே பேசப்படவில்லை. கொரியாவுக்கும், இந்தோ சீனவுக்கும் 'இந்தியா' அளித்துள்ள சேவைகளின் 'லட்சணம்' தாராசிங் போட்டிருக்கும் 'டேரா'வைப் பார்த்த மாத்திரத்தில் மறந்துபோன பொருள்களாகிவிட்டிருக்கின்றன. உலக சமாதானத்தைப் பற்றி மட்டுமே பேசத் தெரிந்து வைத்திருந்த நேரு பண்டிதர், உள்நாட்டில் அமைதியை எவ்வளவு அருமையாகக் கெடுக்கமுடியும்என்பதை தன்னல் முடிந்த மட்டில் பேச்சாலும், தீர்மான ரூபங்களிலும் செய்து முடித்திருக்கிருர். 16-வது காங்கிரஸ் மாநாட்டிலே பேசப்பட்டிருக்க வேண்டிய வெறிப் பேச்சுக்கள், 61-வது காங்கிரஸ் மாநாட்டிலே தங்கு தடையின்றி வெளிப்பட்டிருக்கின்றன.

இளமையும் வெறியும் நெருங்கிய தொடர்புடையவை என்று சொல்வதுண்டு. முதுமையில் தான் வெறியுணர்ச்சி தோன்றும் என்பதை 61-வது காங்கிரஸ் தலைகீழ்ப் பாடமாக மாற்றி விட்டிருக்கிறது.

தெருவில் கூடிக் கூச்சலிடுவோர்க்குத் தெருவிலேயே பதில் கொடுக்கப் போவதாக நேரு பிரகடனப் படுத்திவிட்டார். தெருவிலேயே பதில் கொடுக்கத் துணிந்துவிட்டவர்களைத் தெருவில் நிறுத்தியே கேள்வி கேட்டுத் திணறடிக்க வேண்டும் என்று நெடுநாட்களுக்கு முன்பாகவே நாட்டுமக்கள் 'சங்கற்பம்' செய்துகொண்டிருக்கின்றனர் என்பது பம்பாயும் ஒரிசாவும் உருவெடுத்த பிறகுகூட, நேரு பண்டிதரால் புரிந்து கொள்ள முடியாமலிருப்பது உலக சமாதானத்தைக் கெடுப்பதில் முதல் மார்க் வாங்கக் கூடியவர்தான் என்பதைக் காட்டிக்கொள்ள விரும்புகிருர் என்பதே பொருள்.

தெருவிலேயே பதில்சொல்லத் துணிந்துவிட்ட நேரு, செங்கோட்டையிலிருந்து தெருவுக்கே குடிவந்துவிடட்டும். குறை தெரிவிக்க வேண்டிய மக்கள், சட்டசபையிலும் பார்லிமெண்டிலுமே இன்னிசை எழுப்பிக்கொண்டிருப்பார் என்று நினைப்பது ஏமாளித்தனத்திலும் ஏமாளித்தனமாகும்.

மாளிகைகளிலிருந்து கிளம்பிய உத்தரவுகளுக்குத் தெருவிலே கீழ்ப்படிந்ததுதான் ஆங்கிலேயன் ஆட்சி. தெருவிலிருந்துகிளம்பும்உத்தரவுகளை மண்டபத்திலிருந்து செயல்படுத்துவதுதான் நேருவுடன் சேர்ந்து நாம் எழுப்பிய சுதந்தரக் குரல்.

நேரு, பாதை தவறி நெடுநாள் ஆகிவிட்டது மட்டுமல்ல, பாதையைப் பார்க்கும் பாணியும் மாறிவிட்டது என்பதை இந்த வார்த்தைகள் தெளிவாக்குகின்றன.

மாளிகையிலிருந்து கிளம்பும் நிபந்தனைகளுக்கு மட்டுமே செங்கோட்டையிலிருந்து பதில் எழுதப்படும். தெருவிலிருந்து கிளம்பும் 'கூச்சல்'களுக்குத் தெருவிலேயே பதில் சொல்லப்படும்.

தெருவிலிருந்து தான் மாளிகையே தவிர, மாளிகையிலிருந்து தெருவல்ல வென்பதை நேரு விரைவில் உணர்வார்.

தெருவிலேயே பதில் சொல்ல அவர் தீர்மானித்தது பெரிதல்ல; அவரைத் தெருவிலேயே கேட்க மக்கள் துணிந்துவிட்டது தான் பெரிய விஷயம்.

ஆவடியும் அமிர்தசரசும் ஆயிரமாயிரம் ரகசியங்களை நாட்டுக்குத் தெரிவிக்கத் தயாராகி வருகின்றன. அவைகளின் முழு 'விளக்கமும் கிடைக்கிறவரையில், தெரு தெருவாகவே இருக்கட்டும். அதில் ஓடும் வெறிநாய்களை யாரும் வேட்டையாடிவிட வேண்டாம். ஏனென்ருல், அவைகள் ஏதோ பிரமாதமான பதில் கொடுக்கப் போகின்றனவாமே?

இராவணன்

கோடிய நஞ்சு இனிய பானத்தில் கலந்து தரப்படுவது போன்று இராவணனும் நல்லோனைப் பற்றி நச்சுக் கருத்துக்கள் கவிதையெனும் கனிச்சாற்றில் கலக்கப்பட்டு சில பல கவிஞர்களால் நாட்டுமக்களுக்குத் தரப்பட்டது. அதை அருந்திய மக்கள் இன்னும் போதை தெளியாது பொய்யானவற்றை மெய்யானதென்றே கருதிக்கொண்டிருக்கிறார்கள்- பிதற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் போதையைத் தெளிய வைக்கும் நல்லெண்ணத்தில் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளின் வாயிலாக "தென்றல்" தன்னால் இயன்ற பணியைச் செய்துவருகிறது. அந்தக் கட்டுரைகளில் 'இராவணன்' ஆராய்ச்சிக் கட்டுரையும் ஒன்று. சென்ற இதழில் பேராசிரியர் 'ஈரோட்டான்' அவர்கள் இராவணனின் நேர்மைத் திறனை விளக்கியிருந்தார். இந்த இதழில் இராவணன் தர்மத்தின் பால் கொண்டிருந்த அக்கறையை எடுத்துக்கூறி கட்டுரையை முடிக்கிறார். (ஆ-ர்)

மேலும் இராமன் சூர்ப்பனகையிடம் நடந்துகொண்ட முறையும் சிறப்புடைத்தாகத் தோன்றவில்லை. ஒப்பற்ற அழகியாக சூர்ப்பனகை இராமன்முன் தோன்றுகிறாள். சூர்ப்பனகையின் பேரழகைக் கண்டதும் இராமன் வியந்து நிற்கிறான். சூர்ப்பனகையும் இராமனைக் கண்டாள். கண்ணோடு கண் பேசின. இரு நெஞ்சங்களிலும் எண்ண அலைகள் ஏற்பட்டன; உரையாடலும் தோன்றியது.

"இவ்வளவு அழகுமிக்க ரூபவதியாகிய நீ யார்?" என்றான் இராமன். தென்னிலங்கை வேந்தனான இராவணனின் அன்புத் தங்கையென்றாள் சூர்ப்பனகை. அவ்வாறாயின் நீ இக்கானகத்திலே ஏன் தனித்திருக்கவேண்டும், இங்கு ஏன் வந்தாய் என்றான் இராமன். அதற்கு சூர்ப்பனகை விடை கூறியவளாய் இராமன்மேல் தன் கொண்ட காதற் குறிப்பையும் வெளிக்காட்டினாள். நீயோ செல்வத்தால், வரத்தால், தவத்தால்மிக்க இராவணன் தங்கை. யானோ ஆசிரமவாசி. உன் கருத்தை உன் அண்ணன் ஏற்றுக்கொள்வானா? மேலும் நானோ சத்திரிய குலத்தவன். நீயோ அரக்கர் குலத்தவள் இருவரும் உடன்பட்டு வாழ என் குலக் கோட்பாடுகளும், சம்பிரதாயங்களும் நமக்கு இடமளிக்க வில்லையே என்றான் இராமன். குலக்கோட்பாடுகள் ஒருபுறம் கிடக்கட்டும். காந்தர்வ மணம் வேதத்தாலேயே ஒப்புக் கொள்ளப்பட்டதன்றோ! அதன்படி சத்திரிய குலத்தவன், ஆரிய குலத்தவன் எவனும் தான் விரும்பிய பெண்ணை மணந்து வாழலாமல்லவா? என்றாள். இந்த இனிய உரையாடல் நடந்து வருகையில் தான் பர்ண சாலையினின்றும் சீதை வெளிப் போந்தாள். இராமன் உண்மையிலே ஏகபத்தினி விரதம் பூண்டவனாக இருந்தால், பிறபெண்ணை மனதிலே எண்ணாதவனாக இருந்தால் சூர்ப்பனகையிடம் இவ்வளவுக்கு உரையாடியிருக்கவே கூடாது. இராமன் பேசியதெல்லாம் கேலிக்காக, சூர்ப்பனகையை இகழ்வதற்காக என்று கூறப்பட்டாலும் அது பொருத்தமற்றது. மேலும் இந்த இழிசெயல் காவியத் தலைவனாகிய இராமனுக்கு — திருமால் அவதாரமாகிய இராகவனுக்கு ஏற்புடைத்தல்ல இராமன் கூற்றின்படி நோக்கினால் அவன் சூர்ப்பனகையை பிறர் கருதுவது போல தன் மனப்பூர்வமாக வெறுக்கவில்லை என்பது தெரிய வரும் உண்மையாகும். "இவ்வளவு அழகுமிக்க் ரூபவதியாகிய நீ என்னுடன் இணைந்து வாழ்வதை உன் அண்ணன் ஏற்பானா? மேலும் நான் உன்னுடன சேர்வதற்கு சத்திரியக் குலக் கோட்பாடும் சம்பிரதாயமும் இடந்தர வில்லையே" என்று இராமன் கூறுவதிலிருந்து சத்திரிய. குல தர்மமும், சம்பிரதாயமும் இவனுக்குச் சாதகமாக இருந்தால் சூர்ப்பனகையுடன் அவன் இணைவதற்கு மறுக்க மாட்டான் என்பது வெளிப்படை. சூர்ப்பனகையை மனப்பூர்வமாக இராமன் வெறுப்பவனானால் சூர்ப்பனகையைக் கண்டவுடனேதான் அவளுடன் பேசவோ, மற்ற எதற்கும் இடந்தரக் கூடியவனாகவோ காட்டிக்கொள்ளாமைக் குரிய வெறுப்புக் குறிகளை வெளிப் படுத்திக்கொண்டவனாய், அவளைத் தொடக்கத்திலேயே நிராகரித்திருக்க வேண்டும். எனவே இது விஷயத்தில் இராமன் நடந்து கொண்டமுறை குறைபாடுடையதே.

இராமனுடைய ஒழுக்க சீலத்தில் ஓரிரு குற்றங் குறைகள் காணப் படுகின்றன. "வால்மீகி இராமாயணத்து தடை விடைகள்" என்ற நூலில் இதைப் பற்றி சி. பி. சீனிவாச அய்யங்கார் கூறுவதாவது: "இராமன் ஏகபத்தினி விரதம் பூண்டவன் என்பது ஐயத்திற்கு இடமானதே. அவனுக்கு அயோத்தி அரண்மனையின் அந்தப் புரத்திலே இன்பக் காதலியர் பலர் உண்டு. இவன் சீதையோடு இருக்கும் நிலைக்கு வால்மீகியார் உவமை கூறும்போது ரோஹிணியுடன் இருக்கும் சந்திரன்போல என்று கூறுகிறார். சந்திரனுக்குக் காதலியர் பலர். அதிலே அவனுக்கு மிக விருப்பமானவள் ரோஹிணியே. அது போன்றே இராமனுக்குக் காதலியர் பலர். அதிலே அவனுக்கு மிக விருப்பமானவள்சீதையே என்ற இக்கருத்தை விளக்கவே உட்பொருள் தோய்ந்த சந்திரன்-ரோஹிணி நிலையை சீதா-இராமன் நிலைக்கு வால்மீகியார் உவமை காட்டியிருத்தல் வேண்டும்" என்று கூறுகிறார்.

இதை யெல்லாம் ஆழ்ந்து நோக்கும்போது இராம இலக்குவனர் செயல் சூர்ப்பனகை விஷயத்தில் ஐயுறத்தக்க நிலையிலே இருக்கிறது. சூர்ப்பனகை இராமனைக் காதலித்து அது பலன் பெறாது போகவே இலக்குவன் பால் செல்ல, அவள் அவமானப் பட்டாள் என்று இராமாயணம் கூறுகிறது. இக்கூற்றுக்கு மாறாக ஏன் நடந்திருக்கக் கூடாது? சூர்ப்பனகை உடன்படாத வகையில் வெகுளியுற்ற இராம இலக்குவனர் வேதனையால் அவளது உறுப்புக்களைக் குறைத்துத் தங்கள் கோபத்தை ஆற்றியிருந்திருக்கலாம். உண்மையாக நடந்ததை யார் கண்டார்கள்? ஓரினத்தின் மேல் கொண்ட வெறுப்பின் காரணமாக எழுதப்பட்ட காவியத்தில் உண்மை காண்டலென்பது கடலில் வீழ்ந்த கணையாழியைத் தேடுதற்கொப்பாம். இராமன் நீராடும்போது அவனுடைய காதற் கிழத்திகள் அவனுக்கு நீர் வார்த்து உடல் தேய்த்து இன்புறுத்துவார்களாம். இராமனது பட்டாபிஷேகத்தைக் குறித்து இவர்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர் என்று வால்மீகி இராமாயணம பால காண்டத்திலே முதலாம் சருக்கத்திலே கூறப்படுகின்றது. ஆனால்என்ன காரணம் பற்றியோ இராமனது இத்தகைய செயல்கள் யாவும் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. நடுவு நிலையற்றவர்களின் நல்ல கைங்கரியங்கள் இவைகள்!

இராவணன் வீரத்தின் உறைவிடம்; வெற்றியின் புகலிடம்; ஆண்மையின் பிறப்பிடம். வேத விற்பன்னன். கல்விக் களஞ்சியம் குணக்குன்று பெருமையின் பெட்டகம். அன்பின் சிகரம். கொண்ட கொள்கையில் குன்றாதவன். பெற்ற தனயரிடத்தும் உற்ற தம்பியரிடத்தும் தணியாப் பற்றுக் கொண்டவன். இன்னல் செய்தோர்க்கும் இனியவே செய்யும் அண்ணல்-உயிரினும் மானமேபெரிதெனமதித்து வாழ்ந்த மறத்தமிழன் — அறிவு சான்ற அமைச்சர்களையும், வீரம் செறிந்த மறவர்களையும் அன்பும் பண்பும்மிக்க குடிகளையும் கொண்டு அரசாண்டவன். 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்ற குறட்பாவிற்கு ஏற்ற எடுத்துக் காட்டாய் விளங்கிய ஏந்தல்.

தனக்களிக்கப்பட்ட ஆணையை மீறி இலங்கையையும், அசோக வனத்தையும் அழித்த அனுமனை இந்திரசித்து நாகபாசத்தால் பிணித்து இராவணன் முன் நிறுத்தியபோது அவனை மன்னித்து உயிரோடு திரும்பிப் போகச் செய்தான் இராவணன். தன்னுடன் பிறந்து தன் உப்பைத் தின்று வாழ்ந்து வந்த வீடணன் தனக்கே துரோகம் செய்து தன்னை இராம இலக்குவனர்க்குக் காட்டிக் கொடுத்தபோதும் இராவணன் வீடணனைக் கொல்லாது இராமனோடே போய்ச் சேர்ந்து கொள்ளுமாறு அனுமதித்தான். இத்தகைய பேரன்பும் பெருந்தன்மையும் யாருக்கு வரும்? தன் தங்கையாகிய சூர்ப்பனகையின் மூக்கை இலக்குவன் அரிந்து அவளுக்கு அவமானம் செய்திருக்க, தன் பாதுகாவலில் இருந்த சீதையை இராவணன் யாதொரு அவமானச் சின்னத்தையும் அவள் பால்உண்டாக்கவில்லை. இலக்குவன் சூர்ப்பனகையின் மூக்கை அரிந்ததைப் போலவே இராவணனும் சீதையின் உறுப்புக்களுள் ஏதேனும் ஒன்றைக் குறைத்து அவளையும் அவமானத்திற்கு ஆளாக்கியிருக்க முடியும். ஆனால் இந்த இழி செயலை, நாகரிகமற்ற நாச காரியத்தை, ஆண்மைக்குப் பொருந்தாத அற்பக் காரியத்தைப் பெருந் தன்மையில் மிக்க இராவணன் செய்யவில்லை. அவன் எதையும் செய்திருக்கலாம் சீதையைப் பொறுத்தவரையில்! செய்யக்கூடிய ஆற்றலும், அதிகாரமும் இருந்தும் இராவணன் சீதையை எதுவும் செய்யாது போனது அவனுடைய உயர்ந்த உதார குணத்தைக் காட்டுகிறது.

எடுத்து வந்த சீதையை என்ன இடுக்கண் வரினும் விடேன் என்ற உறுதிப்பாட்டில் இராவணன் ஒரு சிறிதும் இறுதி வரையில் வழுவினானில்லை. தன்னுடைய ஒப்பற்ற தம்பியாகிய கும்பகர்ணன், உயிரினும் மேலான இந்திரசித்து, மதிப்புக்குரிய மாரீசன் போன்ற பலரும் இராம இலக்குவனரால் கொல்லப்பட்ட போதிலும் அதற்காகச் சிறிதும் மனந்தளராது இராம இலக்குவனரை எதிர்த்துப் போரிட அவன் பின் வாங்கவில்லை. தன்னுடைய படையும், கோட்டையும் கொத்தளமும் யாவும் நாசமான போதும் அதற்காக மனம் நலியாமல் தான் ஒருவனே தனித்து நின்று இராம இலக்குவனரோடுபோரிட்டான். அவன் பூதவுடல் பகைவரின் வலிமைக்குத்தோற்று வீழ்ந்ததேயன்றி அவன் உள்ளத்திலே கொண்ட 'சீதையை இராமன் பால்விடேன்' என்ற கொள்கையானது இறுதிவரையிலும் யாரிடமும் தோல்வி காணவில்லை. அவன் உடல் அழிந்த போதும் அக்கொள்கை அவன் உள்ளத்திலே இறுதிவரையில் உயிருடனே இருந்தது. இராவணனை வென்றவர்கள் அவனது கொள்கையை வெல்லவில்லை — வெல்ல முடியவில்லை. தான் கொண்ட கொள்கையில் இறுதிவரையில் பின் வாங்காதவனல்லவா உண்மையான வீரன்! அத்தகைய வீரர் பட்டியலில் இராவணன் பெயரன்றோ முதற்கண் இருத்தல் வேண்டும்? ★

> ''போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !''

எண்ணம்

லர் 2 | 21-2-56 | இதழ் 36

நௌரோஜியும் நேரு(ஜி)யும்!

893 ! லாகூர் காங்கிரசுக்கு நான்தான் தலைமை வகித்தேன். அந்தப் பொறுப்பு எனக்கு இரண்டாவது தடவையாகத் தரப்பட்டது. பெருமை ாடு ஏற்றுக்கொண்டேன். 'லாகூர்' நடந்த காலத்தில் காங்கிரஸ் ட்சி ஒரு முக்கிய பிரச்சினையை மக்கள் முன்வைத்துப் பேசிக்கொண் ருந்தது. மொழிவழி மாநிலம் பிரிப்பதற்குக் காங்கிரஸ் தயார்தான் ன்றால், அனைத்திந்தியக் கட்சிகள் அத்தனையும் காங்கிரசுக்குப் பலம் ந்து ஊக்குவிப்பதாக வாக்குறுதி தந்தன. லாகூர் காங்கிரசில் து தீர்மானமாக வந்தது. மொழிவழி மாநிலம் பிரிப்பது காங்கிரசின் லையாய நோக்கம். அந்தப் புனிதக் கொள்கையை என்னுடைய லைமையில் நிறைவேற்றியது எனக்குப் பெருமை தரக்கூடியதாகும். ன் சார்ந்திருந்த கட்சிக்கு ஜீவசக்தி தரக்கூடிய தீர்மானம் ஏகமன க நிறைவேறியது என்றால் அது மகிழ்ச்சி தரக்கூடிய செயலில்லையா ? னைத்து நினைத்து மகிழக்கூடிய சம்பவமில்லையா ? காங்கிரஸ் கட்சி தந்தரம் பெற்றபின் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றினால்தான் க்கள் சக்திக்கு நன்றி செலுத்தியதாகும்—காலஞ்சென்ற தாதாபாய் ௌரோஜியின் உள்ளொளி இது.

மாநிலப் புனரமைப்பு குறித்து இதுவரை செய்திருக்கிற எந்த டிவையும் டில்லி மாற்றிக்கொள்வதாக உத்தேசமில்லை. கிளர்ச்சி ாலும் போராட்டங்களாலும் எதையும் சாதித்துவிட முடியாது. குழப் ங்களை ஒடுக்கத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஒற்றுமை யக் குலைக்க எண்ணுபவர்கள்தான் மொழிவெறி பிடித்து அலைகிறார் ள், பொதுமக்கள் அத்தகையோர் நடத்தும் கிளர்ச்சிகளுக்கு ஆதரவு ரக்கூடாது—அமிர்தசரஸ் தர்பார்.

★

காங்கிரஸ் கட்சி கடந்து வந்த பருவத்தின் உள்ளத்தையும், அது ட்சி தந்துகொண்டிருக்கும் இன்றைய பருவத்தின் உள்ளத்தையும் மலே படம்பிடித்துக் காட்டி இருக்கிறோம். எதிர்க்கட்சியாக இருக்கும் ாது, அவர்கள் என்னென்ன சொன்னார்கள், எடுபிடிகளைப் பெற்ற ளும் கட்சியாக மாறியபிறகு மக்கள் மத்தியிலே எப்படி நடந்துகொள் றார்கள் என்பதை, மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு வாக்குமூலங்கள் ளவு விளக்கம் தர உதவுமென்று நம்புகிறோம்.

மொழிவழி மாநிலப் பிரிவினைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட ாகூர் காங்கிரசிற்குத் தலைமைவகித்த தாதாபாய் நௌரோஜியை ரும் சாமான்யரென்று சொல்லிவிடத் துணியமாட்டார்கள். வெள்ளை ள மிரளவைத்த வெண்தாடிக்காரர் அவர். பார்சிகுலப் பெரியார்! வெள்ளைக்கார சால்ஸ்பரி, தன்னைக் கறுப்பு மனிதர் என்று சொன்னதற் க தேர்தலில் ஆங்கிலப் பார்லிமெண்டிற்கு அதிகாரம் ற்ற உறுப்பினராக நின்று முதன் முதலாக வெற்றிபெற்றவர். த்தகைய தூய்மைமிக்க தலைவரின் தலைமையிலே நிறைவேற்றப் ட தீர்மானம்தான் மொழிவழி மாநிலப் பிரிவினை. அந்த லாகூர் ங்கே ? இந்த அமிர்தசரஸ் எங்கே ? அதே காங்கிரசுக் கட்சியால் ர்க்கப்பட்ட நேருப் பண்டிதர்தான் சொல்லுகிறார், — எதை ம் செய்வோம், எதிர்ப்போர் அடக்கப்படுவர்—என்பதாக ! பண்டிதர் ங்கோ ஒரு மலைமுகட்டில் இருந்துகொண்டு 'விட்டேனு பார் !' என்கிறார்; சியிலே உட்கார்ந்திருப்பவருக்கு எப்படி உண்மையான கணக்குத் ரியப்போகிறது, அடக்கப்பட வேண்டியவர்கள் எவ்வளவு, அடக்கும் னுவம் எவ்வளவு என்று !

பொதுமக்கள் கிளர்ச்சிகளுக்கு ஒத்துழைப்புத் தரக்கூடாதாம் ! தையும் பண்டிதர்தான் கூறுகிறார். வேறு யாராவது சொல்லியிருந் ல் 'அறியாதவர்' என்று ஒதுக்கிவிடலாம். பண்டிதர் சொல்லுகிறார். ர் அந்தப் பண்டிதர் ? அத்தனை நாட்டு அரசுகளுடனும் கைகுலுக்கிப் ழ் பெற்றவர். எதிர்க்கட்சிகள் அனைத்தையும் தன் வசப்படுத்திக் காண்டிருக்கும் ஒரே சொல்தான் 'பொதுமக்கள்' என்பதை இன்னுமா அவர் உணராதிருப்பார்! அதுவும் உருண்டுகொண்டிருப்பது புரட்சி நூற்றாண்டு ! பேனாவும், பேச்சும் சக்தி பெற்றிருக்கும் காலம் ! ஆனாலும் பண்டிதர் சொல்லுகிறார், பொதுமக்கள் ஒத்துழைக்கக்கூடாது என்று. பரிதாபம் ! காங்கிரஸ் கட்சிக்கும் மற்ற எதிர்க்கட்சிகளுக்கும் இடையிலே இன்னும் பொதுமக்கள் என்று ஒரு சிலர் இருப்பதாகவே அவர் கருதிக் கொண்டிருக்கிறார். இந்தியத் துணைக்கண்டத்தில் பொதுமக்கள் என் பவர்கள் யார் ? அதுவும் காங்கிரஸ் கட்சி கொலுபீடத்தில் அமர்ந்த பிறகு பொதுமக்களெல்லாம் எங்கே போனார்கள் ? அணி அணியாகப் பிரிந்து எதிர்க்கட்சிகளுக்குள் நுழைந்துவிட்டார்களே தவிர, அவர்களைப் 'பொதுமக்கள்' ஸ்தானத்தில் வைக்கும்படி நடந்துகொள்ளவில்லையே காங்கிரஸ் கட்சி ! யார் யாரைப்பொதுமக்கள் என்று பண்டிதர் கருதிக் கொண்டிருக்கிறாரோ, அவர்கள்தான் தனித்தனிக் கட்சிகளின்பேரில் கேட்கிறார்கள் ''ஆசியஜோதியே அளித்திரா நீதி ?'' என்று. பண்டிதர் மறந்துவிடக்கூடாது பொதுமக்கள்தான் கேட்கிறார்கள் என்பதை.

''தமிழர்கள் வாழும் பகுதியை—அவர்கள் பண்படுத்திய பகுதியைக் கேரளத்தாருக்குத் தந்தது அநீதி—தேவிகுளம் பீர்மேடு தமிழருக்கே சொந்தமானது'' என்று கேட்பது பொதுமக்கள் மட்டுமல்ல, காங்கிரஸ் காரர்கள் கேட்கிறார்கள், காந்தியம் செத்தபிறகு அந்த இருண்ட வீட்டி லிருந்து வெளி வந்திருக்கும் காங்கிரஸ்காரர்கள் கேட்கிறார்கள். ஆனால் காங்கிரசிலே உள்ளவர்கள், கண்மூடி, கருத்திழந்து திரிகிறார்கள். ஆனாலும் ஜவகர்லால் சொல்கிறார் பொதுமக்கள் ஒத்துழைக்கக்கூடா தாம்! தென்னாட்டில்—தமிழகத்தில் தி மு க, தமிழரசுக் கழகம், கம்யூ னிஸ்ட்டுக் கட்சி, சோஷியலிஸ்டுக்கட்சி, பிரஜா-சோஷியலிஸ்டுக்கட்சி, திரு-கொச்சி தமிழ்ப்பகுதிகள் இணைப்புக்கமிட்டி, தாழ்த்தப்பட்டோர் சம் மேளனம், திராவிட பார்லிமெண்ட் கட்சி, தமிழர் பேரவை, புதுவை மக்கள் முன்னணி, நீதிக்கட்சி இத்தனை மக்கள் சக்திகளுக்கும் அப்பாற் பட்ட ஒரு ஏமாளிக்கூட்டம் பொதுஜனங்கள் என்ற பேராலே இருப்பதாக-அதுவும் தமிழ்நாட்டில் இருப்பதாகப் பண்டிதர் எண்ணுகிறார் என்றால், அவரைத் திருத்த வரப்போகும் பிப்ரவரி 20ஆல்தான் முடியும் !

நௌரோஜி காலத்திய தீர்மானத்தை நேருஜி கசக்கி எறிவதின் பலனை விரைவிலே அவர் அடையாது போகப் போவதில்லை.

★ ★ ★

காரைக்குடியில் 'களபதி'கள்

காரைக்குடி பிப்ரவரி, 14: நாடெங்கும் நடைபெறப் போகும் 20-2-56க் தேதி ஹர்த்தாலை நல்ல முறையில் அமைதியாக வெற்றிகரமாக நடத்த சர்வ கட்சிகள் கொண்ட கமிட்டி காரைக்குடியிலும் நிறுவப்பட்டது. அக்கமிட்டியின் சார்பாக 13-2-56க் தேதி காலையில் சந்தையில சர்வ கட்சிக் கூட்டுக் காரியதரிசிகளில் ஒருவரும் திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் செயலாளரு மான தோழர் மு. அ. கருப்பசாமி அவர்கள் ஹர்த்தால் நோட்டீஸ் விநியோகித்துக் கொண்டிருக்கும் பொழுது, காரைக்குடி நகர் மன்ற முன்னாள் தலைவர் கே. ஆர். சுப் பய்யா அம்பலம் (நடந்த நகர சபைத் தேர்தலில் கல் லூரி மாணவர் ஒருவரைச் செருப்பால் அடித்துப் பின் மன்னிப்புக்கேட்டவர்), நகர் மன்ற உபதலைவர், அழ. சுப் பய்யா அம்பலம், இராமனாதபுரம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி உப காரியதரிசி பரமசிவம், நகர மன்ற காங்கிரஸ் கட்சி காரியதரிசி எஸ். அருளானந்த உடை யார், பழ. திருப்பதி, அழ. பழனியப்பன், கே. கன்னையா ஆகியோர்கள சில ரவுடிகளையும் சேர்த்துக் கொண்டு தனித்து நின்ற தோழர். கருப்பசாமியைக் கையினால் முதன் முதல், அழ. சுப்பய்யா அம்பலம் தாக்க, பின். தொடர்ந்து மேலே கண்டவர்களும் சில ரவுடிகளும் தாக் கினார்கள். இச்செய்தி காட்டுத் தீபோல் நகரில் பரவிற்று, மக்கள் கொதித்தெழுந்தார்கள் இச்செய்தி கேட்டு. சர்வ கட்சித் தொண்டர்கள் அமைதியை ஏற்படுத்தி மீண்டும் குழப்பம் ஏற்படாது காத்தனர்.

★ ★ ★

வெண்பாப் போட்டி 24

ஈற்றடி : ,தேடிக் கொடுப்பார் .திறம்

முடிவு தேதி 6-3-55.

முகவரி:— வெண்பாப் போட்டி,
தென்றல்,
சென்னை-6

மனைவிக்கு... கணவர்க்கு...

5

— நாக முத்தையா —

அன்புக் கமலா,

உன்னுடைய இந்தப் புதிய போக்கைக் காணுகிறபோது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது. ஒரு ஏழையை இரண்டு முரடர்கள் அடித்தார்களாம். முதலில் அடித்தவன், கையாலும் காலாலும் அடித்தானாம். இரண்டாவதாக அடித்தவன் பிரம்பு எடுத்து வந்து உதைத்தானாம். ஏழை, இரண்டாமவனைப் பார்த்து, 'சாமி நீங்க அடிக்க வேண்டாம். வேணுமானா முதல்லே அடிச்ச மகராசனையே அடிக்கச் சொல்லுங்க' என்று கெஞ்சினானாம். கையடி தேவலை என்ற நம்பிக்கையில் பிறந்த வேண்டுகோள் அது.

உன்னிடமிருந்து கடிதம் வந்தாலும் கஷ்டமாக இருக்கிறது; வராவிட்டாலும் கஷ்டமாக இருக்கிறது, கடிதத்தைக் காணுவதில் பெறுகிற சங்கடத்தைவிடக் கடிதத்தைக் காணாமல் இருப்பதால் பெறுகிற சங்கடம் எவ்வளவோ மடங்கு அதிகமாகவே இருக்கிறது. ஆகையால் எதை வேண்டுமாயினும் எழுது. ஆனால் எழுதாமல் மட்டும் இருந்துவிடாதே.

இதுவரை நீ சாதித்த மௌனம் போதும், இனியாவது உடனுக்குடன் கடிதம் எழுதுவாய் என நம்புகிறேன். பிரம்படிக்குக் கையடி தேவலை என்று எண்ணியவனின் வேண்டுகோளை ஒத்ததுதான் 'கடிதம் எழுதாமல் இருப்பதைவிடக் காரசாரமாகவேனும் கடிதம் எழுது' என்ற என் வேண்டுகோளும். அக்கரைக்கு இக்கரை பச்சை; அவ்வளவுதான்.

தூக்குத் தண்டனையை ரத்து செய்து தரும்படி வேண்டுகிற குற்றவாளிக்கு ஆயுள் தண்டனையை அளிக்கிற அளவுக்காவது அரசர்களின் உள்ளத்தில் அன்பு பிறப்பதுண்டு. ஆனால் உன்னிடத்தில் அந்த அளவுக்கு அன்பு பிறக்காததுகூட ஆச்சரியமில்லை: ஆனால், துண்டு துண்டாக ஆக்கிக் கொல்லும்படி கொலைத் தண்டனையைத் தருவதுதான் என்னால் தாங்கமுடியாததாக இருக்கிறது. தண்டனையைத் தளர்த்தாவிட்டாலும் பாதகமில்லை. அதிகப்படுத்தாது இருந்தாலே போதும்.

உன்னைப் பிரிந்தபோது என் இன்பத்தை மகிழ்ச்சியைப் பிரிந்துவிட்டேன். நான் ஏதோ கதை எழுதுபவனைப்போல எதை எதையோ சொல்லுகிறேனே என்று நீ திகைப்படைகிறாய் அல்லவா?

பரத்தையர் வலையில் வீழ்ந்து, பணத்தையெல்லாம் பறிகொடுத்துவிட்டு, பின்னர் கட்டிய மனைவியை நினைத்து நினைத்துக் கஷ்டப்படும்போது இந்த மண்ணுலகம் நரகலோகமாக மாறிவிடுகிறது.

அப்படியென்றால் சொர்க்கலோகம்? நரகலோகத்தின் முடிவில் சொர்க்கலோகம் துவங்குகிறது. இங்ஙனம் கஷ்டப்பட்டுத் திருந்தி வருகிற கணவனை, மனைவி மனமிரங்கி மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுவாளாயின் அதே மண்ணுலகம் சொர்க்கலோகமாகி விடுகிறது.

ஆகவே, என்னைச் சொர்க்கலோகத்தில் வைத்துக்கொள்ளுவதும் நரகலோகத்தில் தள்ளுவதும் உன்னுடைய மனநிலையைப் பொறுத்துத்தான் இருக்கிறது. என்மேல் கருணை கூர்ந்து சொர்க்கலோக வாசலைத் திறந்துவிடுவாய் என்றே நம்புகிறேன்.

திருடனையும் நேர்மையாளனையும் பற்றிப் பேசும்போது வள்ளுவர் கூறுகிறார்; மனிதனைப் போலவே திருடன் தோற்றத்தில் இருப்பானும். ஆனால், சிந்தையில்தான் வேறுபாடு இருக்குமாம் அதேபோலத்தான் மனைவிக்கும் மானங்கெட்டவளுக்கும் தோற்றம், பேச்சு, எல்லாம் ஒன்றாகவே இருப்பினும் இருவருக்கும் வேறுபாடு ஒரே ஒரு விஷயத்தில்தான் இருக்கிறது; அதாவது நினைப்பில்-சிந்தையில்!

மனைவி நீர்; மானங்கெட்டவள் கானல்நீர், நான் கானலை உண்மையென்று நம்பிவிட்டேன். அதனால்தான் மோசம் போனேன், என் மொய்குழலே.

மீன் இனத்தில் விலாங்கு என்று ஒன்றுண்டு. அதன் தலை, பாம்புபோல் இருக்கும். வாலோ மீன்போல இருக்கும். பாம்பு இரை தேடி அலையும்போது தண்ணீருக்குள் உடலை மறைத்துக் கொண்டு தலையை மட்டும் காட்டும். பாம்பு அந்த மீனையும் பாம்பென்றே கருதி அப்பால் சென்றுவிடும். வால் பாகத்தைக் காட்டிச் சிறிய மீன்களை இழுத்து தன் பசியைத் தணித்துக்கொள்ளும். இங்ஙனம் வஞ்சித்து உயிர் வாழும் விலாங்கு மீனைப்போலவே, வேசியர்கள் பணக்காரரைத் தன் வலையில் சிக்கவைத்துப் பொருளைப் பறித்துக்கொண்டும் ஏழைகளை நெருங்க வொட்டாதபடி தடுத்துக்கொண்டும் ஏமாற்றி வாழ்கிறார்கள். இக்கருத்தை நாலடியாரில் வரும் ஒரு பாடல் விளக்கிச் சொல்லுகிறது. இதோ பாடல்:

> "பாம்பிற்கு ஒருதலை காட்டி, ஒருதலை
> தேம்படு தெள்கயத்து மீன்காட்டும்-ஆங்கு
> மலங்கு அன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்,
> விலங்கு அன்ன வெள்அறிவி னார்."

இப்பாடலை நினைவுறுத்தி, என்னை யாராவது 'நீ யார்' என்று கேட்டால் 'நான் ஒரு மிருகம்' என்றுதான் பதில் சொல்லவேண்டி நேர்கிறது.

நான் விலங்காக இருந்தேன். இப்போது மனிதனாக மாறி வருகிறேன். நெய் திரண்டு வரும்போது தாழியை உடைத்து விடாதே, என் நெஞ்சுக்குகந்தவளே! பொழுதில் வருகிறேன் பொறுத்தருள். புலம்ப வேண்டாம்.

உன்னன்புள்ள,

மாவண்ணன்.

— இரா. கோதண்டராமன் —

அன்புள்ள அத்தான்,

பெண்கள்தான் மென்மையான உள்ளம் படைத்தவர்கள், எதையும் தாங்கும் இதயமற்றவர்கள், என்று சங்க இலக்கியக் கருவூலங்களில் படித்திருக்கிறேன். ஆனால், இன்று உங்கள் முடங்கல் கண்டபின், ஆண்களும் அத்தன்மையுடையரோ, என ஐயப்படும்படி என் நிலை ஆகிவிட்டது. கடந்த இரு கடிதங்களில் வன்மையாகத்தான் கடிந்து எழுதிவிட்டேன். கடலைவிட்டு நீர் ஆவியுருவில் பிரிந்தும், மீண்டும் எப்பாடு பட்டாகினும், ஆறு தூய நீராக, அக்கடலிடையே தான் வந்து தஞ்சம் புகவேண்டும் என்ற உண்மை தெரியாது அவ்விரு கடிதத்தையும் வரைந்துவிட்டேன்.

இருந்தும், 'உன் அன்பிலுவோ என்னுயிரமுதே' என விளித்திருக்கிறீர்கள். இப்பொழுது என் நிலையே, கோர்ட்டில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு வரிவரியாய்ப் படித்துக் குற்றம் சுமத்தப்பட்ட, குற்றவாளியின் நிலைபோல் ஆகிவிட்டது.

உங்கள் மனத்தையறியாது, கடிந்து கடிதம் எழுதிய தவறிழைத்தவள் நான். தண்டிக்கப்படவேண்டியவள் நான் அப்படி இருந்தும், மதவாதியாகவோ, நாடாளும் தலைவனாகவோ மாறி என்னை மன்னித்துவிடு என்று எழுதியிருக்கிறீர்கள். அப்படி என்ன தவறு இழைத்துவிட்டீர்கள் நீங்கள். என் இரு கடிதமும் எனக்கே சொல்லரிய வேதனையைக் கொடுத்துவிட்டது எனின், உங்களுக்கு எத்தனை வேதனையை அவை விளைத்திருக்கவேண்டும்!

அத்தான்! அருகிலிருக்கும் கண்ணாடி நம்மிடம் அணுகுவதில்லை. நாம்தான் அதை அணுகுகிறோம். நம் உருவை அக்கண்ணாடியில் பார்க்கிறோம். நாம் அவ்வுணர்ச்சியற்ற உருவத்தோற்றத்தை நோக்கினால்தான் அவ்வுருவும் நம்மை நோக்குகிறது. நாம் அதை நோக்காவிட்டால் அது நம்மை எடுத்தும் பார்ப்பதில்லை. அத்தகைய, நறுந்தாதுண்டு நயனில் காலை வறும்பூத்துறக்கும் வண்டுபோலும் வஞ்சியரின் தாமரை இலைத்தண்ணீர் தொடர்பை அறிந்து நெஞ்சம் தெளிந்து, திருந்திவிட்டேன் என்று எழுதியிருக்கிறீர்கள்.

இருளில்தான் ஒளியின் தன்மையை அறிந்துகொண்டேன் என்று நீங்கள் எழுதியிருப்பது முற்றிலும் உண்மைதான். உங்கள் திருந்திய போக்கைக் கண்டு என்னுள்ளம் பேருவகையால் பூரிப்படைகிறது.

சிறு வண்டியின்மீது அமர்ந்து இன்பம் துய்க்கப் பெறாவிடினும், சின்னஞ்சிறார் அவ்வண்டியை இழுத்தாலும் பேரின்பம் அடைவதைப்போல், உங்களை மெய்யுற அணைத்து இன்பம் பெறேனாயினும் உங்கள் வாழ்வின் திருப்பத்தை யெண்ணிப் பெரு மகிழ்வடைகிறேன்.

நீங்கள்தான் இலக்கியச் செல்வராயிற்றே! இக்கடிதத்திற்கும், உங்களுக்கும், ஒப்ப ஒரு மேற்கோளைத்தர அருகிலிருந்த சீவக சிந்தாமணி யென்னும் காப்பியத்தைப் பிரித்தேன். வெந்த உள்ளத்தின் வடுவை ஆற்றும் மருந்தாக, என் கருத்தையும் வெளியிடுவதாக அமைந்துவிட்டது அப்பாடல்.

> "பரத்தையர் தோய்ந்த மார்பம் பத்தினி மகளிர் தீண்டார்
> திருத்தகைத் தன்று தெண்ணீர் ஆடிநீர் வம்மி னென்ன
> உரைத்தென் மனத்தி லில்லை உயர்வரைத் தேனை யுண்பார்
> வருத்துங்காஞ் சிரமும் வேம்பும் வாய்கொள்வார் யாவர்சொல்வாய்"

இப்பாடற் கருத்தை மனத்துட் கொண்டுதானத்தான், கடந்த இரு கடிதத்தையும் அன்புச்சினத்துடன் வரைந்தேன். ஆனால், அது எதிர்பாராத விதமாக இருவருக்குமே துன்பத்தைக் கொடுத்துவிட்டது.

கொண்ட மனைவியைக் கைவிட்டு, கணிகை யொருத்தியின் வலையில் சிக்கி, அவள் கைத்தூண்டிலில், வான்பொருளிழந்து, கற்பரசியாம் கண்ணின் மணியன்ன காதல் மனையாள் ஆதிரை என்னும் மங்கையர்க்கரசியின் முகங்காண நாணி, சாதுவன், என்னும் 'மணிமேகலை' காப்பியத் துணைத்தலைவன், திரை கடலோடியும் திரவியம் தேடித்தான், மனைவியின் முகத்தில் விழிக்கவேண்டும் என்றெண்ணிச் சென்றுவிட்டானும்.

இதை எண்ணித்தான் நீங்கள் இன்னும் வராமலிருக்கிறீர்களா அத்தான்? நமக்கு இருக்கும் இச்செல்வமே போதும். அதிக செல்வம் 'செலவோம்' என்று சொல்லுமேயன்றிச் 'செல்லோம்' என்றியம்பாது. மிக்க பொருள் இருப்பதால்தான் மயில்போல் மனைவி இருந்தாலும் மந்திபோல் வைப்பாட்டியும் இருக்கவேண்டும் என்ற பாட்டியின் பொன்மொழி நினைவில் வருகிறது.

இறுதியாக என் நிலையையும் உள்ளக்கிடக்கையையும் வெளியிட முயன்றேன். ஆனால் எனக்காக, குற்றவாளிக்கு வக்காலத்து வாங்கும் வக்கீல்போல் சீவகசிந்தாமணியின் பால் அமைந்துவிட்டது.

> "கன்னம் கனிந்து முற்றிக் காமுறக் கமழுங் காமத்
> தின்னருங் கனியைத் துய்ப்பா னேந்தலே பிறர்க ளில்லை
> பொன்னிறு லுடை யுங்கற் பென்றுரைத்தவர் பொய்யைச்சொன்னார்
> இன்னிசை இவர்க்கல்லது பிறர்க்கென் னெஞ்சிலிடமில்லை
> -யென்றாள்"

அத்தான்! இச்சொல்லின் சுவையை மட்டும் நீங்கள் உணர்ந்துவிட்டிருந்தால் இந்நேரம் நான் உங்கள் அரவணைப்பில் இருப்பேன். நான் தங்கள் வருகையின் வழிமேல் விழிவைத்து, மொழிமேல் செவிவைத்து மோகச் சுழிமேல் என் நெஞ்சோடா நினைவிலிருக்கிறேன். விரைந்து வாருங்கள்.

அன்புள்ள,

கமலா.

நீங்களும் நாங்களும்

பத்திரிகை

“வெள்ளிதோறும் வெளி வந்து எங்களைத் தழுவிய ‘தென்றல்’ இப்போது தாமதித்து வெளி வருகிறதே” என்று உங்களில் பலர் குறைப்படுகிறீர்கள். உண்மைதான். வெள்ளி செவ்வாயாக மாறியதற்குக் காரணம் உண்டு. தென்றல் ஆசிரியர் கண்ணதாசன், மாதத்தில் குறைந்தது இருபது நாட்கள் கூட்டங்களிலே கலந்துகொள்கிறார். கழகத் தோழர்களின் ஆவலைப் பூர்த்தி செய்ய அவர் பல வெளியூர்க் கூட்டங்களிலும் கலந்துகொள்கிறார். அதனால் ‘தென்றலுக்கு’ அவர் எழுத வேண்டியவை தாமதமாகத்தான் கிடைக்கின்றன. அதன் காரணத்தால் தான் ‘தென்றல்’ செவ்வாய் தோறும் வெளிவருகிறது. ஆனால், நமது வாசக நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க இனிமேல் தென்றல் உங்கள் கரத்தில் வெள்ளி, சனியன்று கிடைப்பதற்கு முயற்சி செய்கிறோம். இப்போது உங்களுக்குத் திருப்திதானே!

வேலங்குடித் திருவிழா

வேலங்குடித் திருவிழா தொடர்கதையை நீங்கள் மிகவும் ரசிக்கிறீர்கள் என்பதை உங்கள் கடிதங்கள்மூலம் தெரிந்துகொள்கிறோம். சென்ற இதழில் “இந்திராவுக்குக் குஷ்டம்” என்ற செய்தி தெரிந்ததும் உங்கள் மனம் படாதபாடு பட்டிருக்கும் என்பது தெரியும். மேற்கொண்டு இந்த இதழை ஆவலாக எதிர்பார்க்கத்தான் செய்வீர்கள். இந்திராவின் நலத்திலே உங்களுக்குள்ள நாட்டம் அதிகமாகத்தான் இருக்கும். ஆனால், எதிர்பாராத விதமாக நீங்கள் ஏமாற்றம் அடைய நேர்ந்துவிட்டது. இந்த இதழில் ‘வேலங்குடித் திருவிழா’ இடம் பெறவில்லை. காரணம், ஆசிரியர் நமது பொதுச் செயலாளருடன் தென்னாடு முழுதும் சுற்றுப் பயணம் செய்கிறார். பிப்ரவரி 20 ஐப் பற்றி உங்களுக்குத் தான் நன்கு தெரியுமே! அந்தப் பொதுவேலை நிறுத்தத்தில் நம் தோழர்கள் எவ்வாறு பங்கு கொள்வது என்பதை விளக்கவே பொதுச் செயலாளரோடு ஆசிரியர் பயணத்தைத் தொடங்கியிருக்கிறார். நாட்டின் முக்கிய பிரச்சனையை விளக்கச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளதால் இந்த இதழில் ‘வேலங்குடித் திருவிழா’ இடம் பெறாததைக் குறையாகக் கருதமாட்டீர்கள் என்று நம்புகிறோம். அடுத்த இதழில் நீங்கள் எதிர்பார்க்கும் சுவையான கட்டம் வெளிவரும்.

கட்டுரையாளர்கள்

‘தென்ற’லுக்கு உங்களில் பலர் கதைகள், கட்டுரைகள் எழுதி வருகிறீர்கள். பலர் சிறுகதைகள் நீண்ட தொடர் கதைகளாக இருக்கின்றன. தென்றலுக்கு எழுதுவோர் சுருக்கமாக எழுதி அனுப்புங்கள். தென்றலில் அரைப் பக்கத்திற்கு மேலே போகாமல் இருக்கவேண்டும். பெரும்பான்மை, இலக்கியமாக இருக்கவேண்டும்.

ஆசிரியத்தோழருக்கு

இப்பகுதிக்கு எழுதும் தோழர்கள் பெரும்பாலும் பாராட்டு தலையே தெரிவிக்கிறார்கள். பலர், கட்டுரைகளையே அனுப்பிவிடுகிறார்கள். இப்பகுதிக்கு எழுதும் நண்பர்கள் சுருக்கமாகவும், தெளிவாகவும், பயனுள்ளதாகவும், பொதுப்படையான விஷயங்களையும் பற்றி எழுதவேண்டுகிறோம்.

— தமிழ்ப்பித்தன்

★

ஆளும் கட்சியின் மொழித் தீர்ப்புக்கு எதிர்ப்பு

★

சென்னையிலுள்ள கோகலே மண்டபத்தில் இலங்கையின் சுதந்தர விழாவன்று சென்னையிலுள்ள இலங்கைத் தமிழ் மாணவர் அனைவரும் கூடினர். அக்கூட்டத்திற்கு வழக்கறிஞர் சின்னத்தம்பி அவர்கள் தலைமை தாங்கினார். செல்வன் ம. க. சபாரத்தினம் அவர்கள் செயலாளராகத் தெரியப்பட்டார். அத்தருணம் திரு. செங்கல்வராயன் முன்னை நாள் மேயர், தோழியர் அருண்மொழி ஆசிரியை பிரசன்டேஷன் கான்வெண்ட், கா. மு. ஷெரீப், ஆகியோர் முக்கிய பேச்சாளராகத் திகழ்ந்தார்கள்.

கூட்டத்தின்போது இலங்கை மொழி சம்பந்தமாக ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சுருக்கம் பின்வருமாறு :—

ஆளும் கட்சி வருந் தேர்தலுக்குப்பின் மக்கள் சபையின் முதற் கூட்டத்தில் தமிழைவிட்டு சிங்களத்தை மாத்திரம் நாட்டின் ஒரே மொழியாகக் கொண்டுவரத் தீர்மானிக்கின்றது. ஆகவே, இத்தகைய நடவடிக்கை ஜனநாயக நேர்ச்சிக்கு மாறுபாடானது. இலங்கை அரசியல் சட்டத்தினைத் இருபான்மையோரின் அடிப்படை உரிமையைச் சிதறுவதாயும் கருதுகின்றது. மேலும் இத்தீர்மானம் சமாதானமும் சகோதரத்துவமும் பூண்டு ஒத்துச் சுதந்தரம் பெறத் தொண்டு புரிந்தும் இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்த இரு இனங்களையும் வகுப்பு வெறுப்பும் வீண் குழப்பமும் வளரத்தூண்டும். இரு பாலருக்கிடையில் வேற்றுணர்ச்சி உண்டாகும். மேலும் ஸர் பொன்னம்பலம் இராமநாதனும் வேறு தமிழ்த்தலைவர்களும் 1915-ம் ஆண்டின் குழப்ப காலங்களில் சிங்கள இனத்தவர்களுக்குப் புரிந்த சேவையின் நினைவாலும் நன்றியாலும் ஒரே மனதாக இக்கூட்டம் ஆளும் கட்சியின் நடவடிக்கையைக் குறித்து வருத்தம் தெரிவித்து மேற்கூறிய தீர்மானத்தைக் கைவிடும்படி திரும்பவும் வேண்டிக் கொள்கின்றது.

மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேறின.

துறவியர்

தமிழண்ணல்

துறவியரை வணங்கிஎழத் துடிதுடிக்கும்
தூயதமிழ் நெஞ்சத்தீர்! இந்த நாட்டில்
துறவியரில் எத்துணையோ வகைகள் உண்டு!
தோலிருக்கச் சுளைவிழுங்கி வாழுகின்ற
துறவியரும் உள்ளனர்காண்! வறுமை வாட்டும்
துன்பத்தால் வழியற்றுத் தவித்து வித்துத்
துறவேற்ற ‘ஆண்டிகளும்’ திரிகின்றார்காண்!
தூயவரைக் காணுகிலேன்; இன்னும் கேளீர்!

பிள்ளைகளைக் கணக்கின்றிப் பெற்று விட்டுப்
பிழைப்பதற்கு வகையறியான் துறப்ப துண்டு!
கொள்ளையிட்(டு) ஆறேழு கொலையும் செய்த
கொடியவனும் துறவியேனும் வடிவம் தாங்கிக்
கள்ளமிற ஆடையிலே மறைவ துண்டு!
கடவுளையும் தீமைசெயத் துணையாக் கொள்ளும்
உள்ளத்தார்க் கடிமைசெயும் தமிழ நாட்டீர்!
உண்மையினைக் கேட்பீரோ? உணர்ச்சி கொள்வீர்!

வரும்படியே இல்லாதான் துறவி யானால்
வருமானம் பலகோடி, சந்நி தானப்
பெரும்பெயர்கள், சொத்துசுகம், வேலை யாட்கள்,
பிறரெல்லாம் தாள்பணியும் பெரிய வாழ்வு,
கருதுகிற இன்பமெலாம் நினைத்த போதே
காலடியில் தவழ்ந்துவரும்! உழைக்க வேண்டாம்!!
துறவினையும் பொருள்சேர்க்கும் தொழிலாய்க் கொண்டார்!
தொல்லுலகை வெல்லவிது வழியாய்க் கண்டார்!!

ஒற்றைச்சாண் வயிறென்பர் துறவி கட்கோ
ஒன்பதுசாண் வரைவளரும் வயிறு! மேலும்
மற்றவர்க்கோ ஒருமனைவி! துறவி கட்கு
மனமின்றித் திருமணந்தான், இன்பம் கொள்ள!
வெற்றுரைகள் உபதேச விளக்கம் ஊர்க்கு!
விளம்பரமோ மிகவதிகம் செய்தித் தாளில
பற்றற்றோர் புகைப்படங்கள் பலகோ ணத்தில்!
பாதத்தில் வந்துவிழ மூடர் கோடி!

ஒருபற்றும் அற்றவர்க்குக் குண்ட லங்கள்
ஒருதேங்காய் அளவிருக்கும், முழுதும் தங்கம்!
தெருவில்நடந் தறியார்க்குப் பொற்செ ருப்பு!
திகழ்கின்ற தாழ்வடங்கள் ‘லிங்கம்’ போன்றால்!
அருமையுடன் தவம்நோன்பு செய்தி ளைத்த
அவருட்டம்போ ‘பயில்வானைப் பரிக சிக்கும்!
அறிவுடையோர் உண்மைசொலின் அலறு தற்கே
ஆத்திகர்கள் பலகோடி அவர்பக் கத்தில்!

பெருமையினுக் கெல்லையெனப் பெண்ணி னத்தைப்
பேசுகிற வள்ளுவத்தில் துறத்தல் என்றால்
மருவுமொரு மனையாளைப் பிரிதல் என்ற
மடமையினைக் சண்டதில்லை வாழ்வை நீங்கி
ஒருவுதலும் இல்லையில்லை! சிலரைப் போல
உழைக்காமல் பிழைக்கவழி சொல்ல வில்லை!
துறவென்றால் மனத்தாசை துறப்ப தொன்றே
துறவாகும் என்பதுதான் தமிழ்ப்பண் பாடு!

திடமிகுந்த தென்னாட்டை வெல்லு தற்குத்
தீரமில்லார் வேடமிட்டு நல்லவர் போல்
வடநாட்டார் கமண்டலமும் கையு மாக
வளைத்திட்டார் அந்நாளில், வஞ்ச கத்தால்
படையெடுத்தார், படிப்படியாய் நம்பண் பாட்டைப்
பழிகட்டித் திரித்துவிட்டார்! இதையு ணர்ந்தே
மடமையிது “கூடாத ஒழுக்கம்” என்று
மன்னுபுகழ் வள்ளுவரும் கடிந்து சொன்னார்!

அரண்மனைகள் சுகபோகம் ஆட்சிப் பேறு
அழகுருவாம் உயர்மனைவி குழந்தை விட்டு
மறவழியில் சென்றுழலும் வையங் கண்டு
மன முடைந்து ‘இந்துமதக்’ கறையை மாற்றத்
துறவேற்றான் சித்தார்த்தன், புத்தன் ஆனான்!
தோண்டோன்றே வாழ்வானான் இதனை எண்ணின்
அறிவுடையீர் இதுசிலர்க்கே உரிய தாகும்
அனைவருக்கும் பொதுவான கடமை அன்று!

மடமையினைக் களைந்தொதுக்கி அறிவைக் காக்க
மன்னுபுகழ், தன்னலங்கள் துறப்ப துண்டு!
கடமைசெய உயிரினையும் துறப்ப துண்டு.
காதலுக்காய்ப் பேரரசைத் துறப்போ ருண்டு!
திடமான மனங்கொண்டார் துறப்ப தெல்லாம்
திகழ்கின்ற உலகத்தில் கலப்ப தற்கே!
கடன்காரர் போலோடிக் கண்ணை மூடிக்
கரந்தொளிந்து வாழ்வதெலாம் துறவே யன்று!!



கருத்துப் போக்கிஷம்! காதற்காவியத்தின் இன்பத் தலைவி! துயரைக் களையவந்த எழில்ராணி—என்று புகழ்ந்த தன் கணவனைச் சாவு அழைத்த துன்பக் கதையைச் சொல்லும் ஒரு மங்கையர் திலகத்தின் கண்ணீர்ப் பட்டயம் இது. எல்லாம் மாயை என்று மறுத்துரைக்கத் தெரிந்தவர்களுக்கு, தன் வாழ்வைச் சரிப்படுத்த மாற்றுரைக்கத் தெரியவில்லையே என்று சமுதாயத்தைச் சாடுகிறுள், இளமையைச் சருகாக்கிக்கொண்டிருக்கும் அந்த யுவதி. படியுங்கள்! கண்கலங்குவது உறுதி. —[ஆர்.]

அமைதி அமைதி என்று ஆர்ப்பரித்த அப்பேதையின் நெஞ்சம் புயல் சூழ்ந்த தீவாகியிருந்தது. என்றும் போலவே அன்றும் அவள் கோவிலிலிருந்துதான் திரும்பிக்கொண்டிருந்தாள். எவரெவரோ எங்கெங்கோ தேடிக் கொண்டிருக்கும் இன்பத்தையும் அமைதியையும் அங்கே பெற நினைத்துத்தான் அவள் வெள்ளியும் செவ்வாயும் விடாமல் நடந்து கொண்டிருந்தாள்! பலன்...?

ஏழு வயது...எழில் துளிர்க்கும் இளம்பருவம். தாயின்பத்தின் தோற்றுவாயாக அமைந்திருந்தான் அவளது செல்வன். நடந்துகொண்டிருந்த வேணியின் காதுகளில் அம்மா...அம்மா என்று அவன் அழைப்பதுபோலிருந்தது. நீர் சோர்ந்த கண்களுடன் அவள் நடந்துகொண்டிருந்தாள். கடந்த சில மாதங்களாக செல்வனுக்கு உடலுக்குச் சரியில்லை...வீட்டிலே துடிக்கும் சிறுவனின் வியாதிக்கு, காணுத கடவுளிடம் மருந்து வாங்க நடையாக நடந்துகொண்டிருந்தாள் வேணி. பாவம்! உலகம் அவளை விளையாட்டுப் பொம்மையாக்கி மகிழ்ந்துகொண்டிருந்தது! நாள் பார்த்து, நேரம் பார்த்து, நீரறிய நெருப்பறிய அவளுக்கும் அவனுக்கும் திருமணம் முடித்து வைத்த அதே உலகம்...''பேறு பதினாறும், பிறவும் பெற்றுப் பெருவாழ்வு வாழ''ப் பணித்த அதே உலகம்,

''அடிபாவி! நட்டபயிர் அறுக்கவில்லையே! அறுத்துவிட்டாளே அதற்குள்ளாக...இ...ம்! பூஜா பலன் இல்லை...துரதிஷ்டசாலி! விதி...!'' இப்படிக் கூறவும் தயங்கவில்லை. வேணி கதறினுள்....அழுதாள்......புழுவெனத் துடித்தாள்.....பலன் ஏதுவுமேயில்லை! மாண்டார். வருவரோ?'' என்றெண்ணித் தேறினளோ இன்பம் கனத்ததை எண்ணி வாழ்ந்தாளோ?

அவள் அழுத கண்ணீர் வற்றவில்லை. அழுதுகொண்டேயிருந்தாள், அந்தச் சீழ்பிடித்த உலகம் அப்போதும், அவளருகில் வந்தது; துளசிமாடத்தைச் சுட்டிக்காட்டியது, சொர்க்கவாசலைப் பற்றிப் பேசியது. வேணி நம்பினுள். பாவம்! வகை வகையாய் வழி வகுத்துக் கொடுத்த மூட உலகத்திற்கு வேணி...ஆம்! அந்த விதவையும் அடிமையானுள்-ஒரு புது அங்கமானுள்!

சொர்க்கத்துக்குப் போவதில் தீவிர நாட்டம் செலுத்தினுள் அம்மங்கையர்க்கரசி! வீட்டிற்குள் நுழைந்தபோது செல்வன் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்துகொண்டு அழுதுகொண்டிருந்தான். நினைவிழந்து நலிந்து கிடந்த அவனைத்தனியேவிட்டுத் தான் வேணி வெளியே சென்று வந்தாள். ''அம்மா...அம்மா...'' செல்வன் உணர்விழந்து கூப்பிட்டான். இனிமையற்றிருந்த அவன் பேச்சு வேணியின் இதயத்தைப் பிளந்தது. ''அம்மா...ஏம்மா அப்பா இன்னும் வரலே?'' ஆவலோடு கேட்டானவன்.

என்றுமே அவனுல் காண முடியாத அவனது தந்தையின் நினைவு அவனை விநாடிக்கு விநாடி தின்று கொண்டிருந்தது.

ஆம்! அன்று அவன் கேட்டான்.

''அம்மா! நம்ம அப்பா எங்கேம்மா இருக்காரு?'' செல்வனின் இக்கேள்விக்கு மிகவும் சீக்கிரமாகவே பதில் சொல்லி விட்டாள் வேணி!

''என்னடா கண்ணு! அப்பா தானே! நம்ப அப்பா சொர்க்கத்திலே இருக்காரும்மா...'' மூடச்சமூகம் அவளுக்குத் தந்த பதிலை அவள் அவளது செல்வனுக்குத் தந்தாள்!

''ஏம்மா! பின்னே எப்போ இங்கே வருவாரு...?'' இந்தக் கேள்வி வேணியைத் திடுக்கிடச் செய்தது; அவள் திக்குமுக்காடினுள். நெஞ்சம் விம்மியது. அவள் அழுதேவிட்டாள்...பிறகென்ன செய்வாள் பேதை! ஏதோ பதிலும் சொன்னுள்.

இரவும் பகலும், நாளொரு கிழமையும் உருண்டு ஓடிக் கொண்டிருந்தன. அந்த இள நெஞ்சம் ஏங்கிக்கொண்டிருந்தது. ''அப்பா...அப்பா''என்று அவனழுத குரல் வரண்டிருந்தாலும் வேணியின் நெஞ்சத்தில் எதிரொலித்துக் கொண்டிருந்தது அவள் பயந்தாள். இப்போது அந்தக் கேடுகெட்ட உலகம் ஒதுங்கிக்கொண்டது - எழிலைப் பொசுக்கி நிற்கும் சிற்பங்கள், வாயற்ற தெய்வங்கள் - இந்த விநோத உலகம்தான் வேணியையும் அவளது செல்வனையும் சுற்றியிருந்தது!...ஊமைஉலகம்!

அன்னையின் கண் கலங்க அந்தப் பிஞ்சுநெஞ்சம் பொறுக்கவில்லை. அவன் மிகவும் நைந்த குரலில் கேட்டான் ''ஏம்மா அழுகிறுய்? அப்பா வரலேன்னு தானே?'' செல்வனை விடையும் தந்து கொண்டான். வேணி வேதனையோடு செல்வனின் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள். இப்போது அவள் முகம் வெளுத்துக்கிடந்தது. நம்பிக்கையற்ற நடைப்பிணமாக அங்கு மிங்கும் நடந்துகொண்டிருந்த அவளது எண்ணச் சுருள் விரிந்து விரிந்து சுருங்கியது. கனத்திருந்த கண் இமைகள் உணர்வற்று இமைக்க மறந்தன; புனல் சேர்ந்த அவளது விழிகள் இருள்கவிந்த வானத்தை ஊடுருவி நின்றன.

வேணி திடுக்கிட்டுத் திரும்பினுள்; யாரோ செல்வனை அழைப்பதைக் கேட்டாள்-வியப்புற்றுள். கண்களைத் துடைத்துக் கொண்டே கேட்டாள்.

''யாரது...யாரைத் தேடுகிறீர்கள்'' தெம்பிழந்து பேசினுள் தேன்மொழியில்! வந்திருந்த இளைஞன் சற்றுப்பின் வாங்கினுன்...

''மன்னிக்கவேண்டும்....வந்து தாமரைச் செல்வன் வீடு...'' அவன் கேட்டகேள்வி வேணியை எண்ண முடியாத் தூரம் உயரே தூக்கிக் கீழே போட்டது போல் இருந்தது. அவள் அலறினுள்; அமைதியான இரவைக் கொடூரமாக்கி எதிரொலித்தது அது. பயந்து நின்றஅவ்விளைஞன்செய்வதறியாது திகைத்து நின்றுன்; பளிச்சிட்ட மின்னலில் அவன் அவளது உருவைப் பார்த்தானே யொழிய, வேணு அவனை ஏறிட்டுக்கூட நோக்கவில்லை. விம்மலுக்கிடையில் கேட்டாள்......''நீங்கள்......''

''நான் தானம்மா மனோகரன் மதுரை—எனக்கு.........நீங்கள் தான்...''

பதிலே பேசவில்லை வேணி. அவனுக்கு எல்லாம் புதிராகவே தோன்றியது போலும்! வேதனையோடு திரும்பினுன் வந்தவன்.

பல முறை படித்துப் படித்துச் சலித்துப்போன அந்தக் கடிதத்தைப் பத்திரப்படுத்திவிட்டு, செல்வனின் தலையைக் கோதி விட்ட படியே உட்கார்ந்திருந்தாள் வேணி.

''அம்மா...அப்பா எங்கேயம்மா?'' இப்போது அவன் அழுதான். ஒலியற்ற குரல் உணர்வற்ற உதடுகளைத் தழுவியபடி வந்தன.

''அப்பாவா......அப்பா...என் நெஞ்சிலும் நினைவிலும் இனித்துக் கிடக்கும் உன் அப்பா அதோ வெண்ணிலவும் தாரகையும் வட்டமிடும் எழில் நீல வானத்திற்கப்பால்! தேனோடை, பால் பெருகும் தேவலோகத்திலடா கண்ணே...நல்லவர்களின் உலகத்தில் பொல்லாதவர்களுக்கு வேலை? உன் அப்பா மிகக் கொடியவர்...ஆம்! இல்லையேல் உன்னையும் என்னையும் வேதனைக்கும், பழிச்சுமைக்கும் சுமைதாங்கிகளாக ஆக்கிவிட்டு அங்கு போவாரா?

''கருத்துப் பொக்கிஷம்,காதற் காவியத்தின் இன்பத் தலைவி, என் துயரைக் களையவென்று வந்த எழில் ராணி'' என்றெல்லாம் பேசிப் பேசித் துன்பத்தை, துயரை என்னிடம் விலைக்கு விற்றுவிட்டுப் போய்விட்ட உன் அப்பாவா? அவர் வரவே மாட்டார்...! வேணியின் இதயம் படபடத்தது; தலை சுழன்றது; அவள் அழுதாள் — செல்வன் புலம்பினுன், வேதனையோடு விம்மினுன். தாய்மை அழுதது—தன் குழந்தையின் சாவுப் பிடியைக் கண்டு.

வேணி—ஆம்! அவளே தான்! விதவை வேணியேதான்! நினைவெனும் நஞ்சு கொல்ல, துணையிழந்து 'அப்பா-அப்பா, வென அலறிச் சாகும் செல்வனின் அருமைத்தாய் — அவளேதான். மாவிலைத் தோரணங்காணசெல்வர்தம் களிக்கூடமாம் அந்தக் கோவிலைச்சுற்றிவந்தாள்;அழுது முறையிட்டாள். புலம்பினுள்; என்னென்னவோ பேசினுள். அத்தனையும் இன்பத் தமிழிலே! அப்படி யிருந்தும் கற்சிலைகள் அசையாது நின்றன! பதில் பேச மறுத்தன...... எல்லாம் மாயை என்று மறுத்துரைக்கத் தெரிந்தவர்க்கு மாற்றுரைக்கத் தெரியவில்லை! வேணி—இப்போது சிரித்தாள்.பொலிவிழந்த அவள் இளவதனம் மெருகேறியமின்னலெனச் சுடர்விட்டது; குமுறும் எரிமலையானுள்; கொந்தளிக்கும் கடலாகி நின்றுள்! ஆத்திரத்தில் அவளது செம்பவழ உதடுகள் துடித்தன......அவள்பேசத்தான் எண்ணினுள். ஆனாலும் பேசவில்லை! அவளுக்குத் தெரியும் அத்தனையும் கல்லாலடித் தவை யென்று—காதற்றவை உணர்வற்றவை—ஏன் உயிரற்றவை என்றுகூடத்தான் இப்போது புரிந்துகொண்டாளே... பேதை! எண்ணத்திலே புதுமை அவள் கொண்டாள்—அவள் அழகிலே மெருகேறியதிலிருந்து தான் அது தெரிகிறதே. வேணி

—10-ம் பக்கம் —

சாகாத எண்ணங்கள்!

'இந்தியன் பீரோ' என்னும் அலுவலகம். அதில் குமாஸ்தாவாக வேலை செய்துவந்த அவனிடம் அலுவலகச் சேதியாக எதையோ கேட்பதற்கு அவனது மேஜையின் முன்வந்து நின்றான் அலுவலகச் செயலாளன் ஹார்லன். வந்தவனின் கண்கள் மேஜையின் மூலையிலிருந்த 'புல்லிதழ்கள்' எனும் புத்தகத்தின்மீது நிலைத்து நின்றன. அவனது பார்வையில் தெறித்த உணர்வு, அவனுக்குப் பிடிக்காதது அந்தப் புத்தகம் என்பதை விளம்பரப்படுத்தியது.

'யாருடையது இந்தப் புத்தகம்...?' ஆத்திரத்தோடு கேட்டான அவன்.

'என்னுடையதுதான்...' நிதானமான பதில் வந்தது குமாஸ்தாவிடமிருந்து.

புத்தகத்தை 'வெடுக்'கென எடுத்துப் புரட்டிய ஹார்லன் அதனுள்ளே அச்சிடப்பட்டிருந்த ஆசிரியரின் படத்தையும் குமாஸ்தாவின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தான். இருவரும் ஒருவரே என அறிய நெடுநேரமாகவில்லை. அவனுக்கு சினத்தால் முகம் சிவக்க, கண்கள் கனலைக் கொட்ட அவன் கட்டளையிட்டான்:

'இந்த அயோக்கியத்தனமான ஆபாசப் புத்தகத்தை எழுதியவன் நீதானா...? நடவெளியே...!'

குமாஸ்தா பதிலே பேசவில்லை. பாயும் புலிக்கு பயந்து பதுங்கிச் செல்லும் புள்ளிமான்போல ஓங்கித் தரப்பட்ட அடியினால் உணர்விழந்து செல்பவனைப்போல புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு அமைதியாக அலுவலகத்தைவிட்டு வெளியேறினான். அவன்தான் 'பழைய கட்டுப்பாடுகளையும் முட்டுக்கட்டைகளையும் உடைத்தெறிந்து கவிதைக்கும் வசனத்திற்கும் புதிய விடுதலை ஓட்டம் தருகிறேன். எனது ஆசான் எனினும் அவன் எழுதிய வழக்கமான கருத்துக்கள் இக்காலத்திற்கு ஏலாதனவெனில் அவற்றைத் தகர்த்தெறியத் தயங்கேன்...' என முழங்க உள்ளத்தை வெளிப்படையாக சிர்தளைகளுக்குக் கட்டுப்படாமல் அஞ்சாமல் சொல்பவனே கவிஞன். உண்மைக்கவிஞன் எதுகை மோனையின் அடிமை அல்லன். அவன் அவற்றின் தலைவன். கருத்தின் முதல்வன். அவன் ஒரு படைப்பின் காரணன்! அவன் மகாகவி! அவன் தன்னையே உலகிற்குத் தரும் காவிய அருவி! அவனே சமுதாய வாழ்விற்குப் புதிய உருவம் தருகிறான். அவன் எதற்கும்,, எவருக்கும், எந்தப் பழைய வழக்கத்திற்கும் கொத்தடிமை அல்லன் என உண்மைக் கவிஞனுக்கு இலக்கணம் வகுத்து, அதன்படி நின்று ஆழம், உருக்கம், கவர்ச்சியிக்க தோற்றம் இவைகளோடு திண்மையும் செறிவும், சீர்மையும் கூர்மையும் கொண்டு படிப்போரின் உள்ளத்தைத்தொடும் உயர் கவிதைகளை உலகுக் களித்த தலைசிறந்த அமெரிக்கக் கவிஞனை புத் லகக் காவலன், மறுமலர்ச்சிக் கவியுலகின் முன்னோடி புரட்சிக் கவிஞன் வால்ட் விட்மன்.

விட்மன் சின்ன வயதிலேயே இயற்கை அழகில் தன் உள்ளத்தை இணைத்துக்கொண்டான். எழிலும் மணமும் நிரம்பிய மலர்களையுடைய பூங்காக்களும், அறிஞர்களின் சிந்தனைகளைப்போல நீண்டு பரந்து கிடக்கும் கடற்கரைத் தோற்றமும், பறவைகளின் இனிய இசையும் அவன் இதயத்தைப் பற்றிக் கொண்டன.

பன்னிரண்டாம் வயதுவரை மட்டுமே படித்த விட்மன் குடும்பத்தின் ஏழ்மையை அதிகரிக்கும் முறையில் 'தண்டச்சோற்று'க் காரனாக இருந்துவிடாமல் இரண்டு ஆண்டுகள் ஒரு வழக்கறிஞரிடம் வேலை பார்த்துத் தன் வயிற்றை நிரப்பிக்கொண்டான். அப்போது அந்த வீதியிலுள்ள அச்சகம் ஒன்றின் அச்சுக்கோப்பவனின் நட்புக் கிடைத்தது அவனுக்கு. அதைப் பயன்படுத்தி அதனைக் கற்றுத் தேர்ந்து, தன் பதினேழாம் வயதில் அங்கேயே அச்சுக்கோப்பவனாகப் பணியாற்றினான் விட்மன். அந்த அலுவலின்போதுதான் அச்சக அதிபரின் வீட்டிலேயே தங்கி அவர் நடத்திய பத்திரிகைகளில் சிறு கட்டுரைகள் எழுதத் தொடங்கினான் அவன்.

விட்மனுக்கு அச்சுத்தொழில் மிகவும் பிடித்திருந்தது. நல்ல இலக்கியங்கள் பலவற்றை அவன் அச்சுக் கோர்க்க வேண்டியதிருந்தது. அப்போதெல்லாம் அவற்றை ஆர்வத்தோடு படித்துத் தன் அறிவை வளர்த்துக்கொண்டான் அவன். பிறகு அவன் லாங் ஐலண்டில் நான்கைந்து ஆண்டுகள் பள்ளி ஆசிரியனாக இருந்து ஏழை மாணவர்கட்குக் கல்விச் செல்வம் கிடைக்க வழி செய்தான். இதனோடு அவன் டென்னிசன், ஹோமர் ஆகியோரின் நூல்களையும் பைபிளையும் பிறவற்றையும் படித்து முடித்தான். இடையில் ஒரு பத்திரிகையும் நடத்தினான்.

'நரகம் எனும் பூச்சாண்டி எனக்கு வெறும் தூசு!
'சொர்க்கம் எனும் மாயவலை எனக்கு அணு மாத்திரம்!
'இயற்கையை வைத்தே நான் எல்லா நூல்களையும் பதம் பார்ப்பேன். அகராதியை-இலக்கணத்தை வைத்து நான் அவற்றை அளவிடுவதில்லை.
'தத்துவ ஏடுகளைவிட என் பலகணி அருகே பூத்திடும் காலைக் கதிரவனே எனக்குக் களிப்பைத் தருகிறது. மாதா கோவிலையும் பைபிளையும்விட என் மூளை மீது எனக்கு நம்பிக்கை உண்டு.
'வீரமே! ஆர்வமே! ஆற்றலே! நீங்கள் எனக்குக் கடவுளாகுங்கள்......!'

—வால்ட் விட்மன்.

தந்தை செத்த பிறகு, பத்திரிகைத் தொண்டு பயனுள்ளது எனக் கருதி 'லாங் ஐலண்டர்' எனும் பத்திரிகையைத் தொடங்கினான் விட்மன். அது அவன் விரும்பிய அளவு செல்வாக்குப் பெறவில்லை. கணக்குப் புத்தகம் நட்டத்தைக் காட்டியது. எனவே இரண்டு ஆண்டுகட்குப் பிறகு தனது பத்திரிகை அலுவலகத்தையே விற்றுவிட்டான் அவன். அதேநேரத்தில் ஜமாய்காவில் 'லாங் ஐலண்ட் டெமாக்ரேட்' என்ற பத்திரிகைக்கு ஆசிரியர் தேவையிருந்தது. பெருமுயற்சி செய்து அந்த வேலையைப் பெற்றுப் பணியாற்றிய அவன் அதில் தனது எண்ணங்கள் முழுவதையும், தனது ஜனநாயகக் கருத்துக்கள் எல்லாவற்றையும் தயங்காது எழுதினான். அப்பொழுதுதான் அவன் கவிதை எழுதவும் ஆரம்பித்தான். கவிதைகளுக்கு வேண்டிய எதுகை, மோனை, தளை, துறைகளை அவன் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. தனக்கென ஒரு பாதை வகுத்துக்கொண்டு அவன் பாடினான். கடவுட் கவிதைகளை, அற்புதங்களை அவன் பாடவில்லை.

முழு விடுதலைச் செயலுக்காக ஆற்றலும் இன்பமும் ஆசையும் முடிப்பும் அமைந்த அளவற்ற பெருவாழ்வை - பழமைக்குட்டையில் பாசிபடர்ந்த பழக்கங்களை ஒழித்து வாழ்விற்கு ஒட்டமளிக்கும் கவிதைகளை அவன் எழுதிக் குவித்தான். பழங்கவிகளின் எதிரொலியாகவோ - பழைய வழக்கத்தின் பின்பாட்டுக்காரனாகவோ அவன் அமையவில்லை. வெறும் கனவு காணும் புலவனாக அவன் நடமாடவில்லை. எண்ணத்திற்கு நிலையான செயல் வடிவம் தந்து உலகிற்கு நலம் செய்யும் ஆற்றல்மிக்க கவிதைகளை, பழைய அச்சில் இறுகிக் கட்டுப்படாத எண்ணங்களை வெளியிடும் கவிதைகளை, விடுதலை அருவியொத்தவீராவேசத் தன்மையுடைய உயிர்க்கவிதைகளை எழுதிக் காரியவாதியான புலவனாக அவன் காட்சி தந்தான். அவன் மாதா கோவிலுக்குள்ளும் மத ஏடுகளுக்குள்ளும் தன்னை மறைத்துக் கொள்ளப் பிரியப்படவில்லை. எதையும் சிந்தித்துப் பார்த்துத் தனக்குச் 'சரி' எனப் பட்டதை ஏற்றுப் பாடினான். தனது கவிதைகள் மூலம் எல்லோரையும் ஒரே சமுதாயத்தினராக, ஒரே உலக மக்களாகத் தன்னுடன் வெளிப்படையாக வாழ அழைக்கும் ஆவேச உணர்வை அவன் வெளிப்படுத்தினான்.

ஆனால், அவனது எண்ணம் - மக்களின் இதயத்தைத் தொட வேண்டும் தனது கவிதைகள் என்ற அவனது ஆசை - நிறைவேறவில்லை. முடியவில்லை. எனவே, பத்திரிகை வேலையை விட்டு விட்டு

மேன்ஹாட்டன் என்ற ஊரில் மறுபடியும் அச்சுக்கோப்பவனாக ஆனான் விட்மன். அங்கிருந்து பல பத்திரிகைகட்கும் சிறு கதைகள், கவிதைகள் இவற்றை அனுப்பி வைத்தான்.

பின்னர் பல பத்திரிகை அலுவலகங்களிலும் பணியாற்றினான். நிலையான தொழில் எதனையும் அவன் பெறமுடியவில்லை.

1841-ம் ஆண்டு விட்மன் முதன் முதலில் 'ஃப்ராங்ளின் ஈவான்ஸ்' என்ற நாவலை ஒரு நியூயார்க் பத்திரிகையில் வெளியிட்டான். அதனை ஏறிட்டுப் பார்க்கும் எண்ணம்கூட எவருக்கும் அப்போது ஏற்படவில்லை.

பிறகு விட்மன் 1846-ம் ஆண்டு 'புரூக்லின் டெய்லி ஹெரால்டு' பத்திரிகை ஆசிரியனாகித் தனது கவிதைகள்மூலமும் பிற எழுத்தோவியங்கள் மூலமும் தன் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்தான். அப்பொழுதெல்லாம் அவன் அமெரிக்காவின் நீக்ரோ அடிமை முறையைக் கண்டித்துக் காரசாரமாக எழுதினான். பத்திரிகை முதலாளியின் கருத்துக்களோ விட்மனுடையவற்றை ஒத்ததாக இல்லை.

விட்மன் தனது முப்பதாம் வயதில் அழகி ஒருவளைக் காதலித்தான். அவள் உயர்ந்த நிலையில் இருந்தவள். எனினும் அவள் அவன் மீட்டும் வீணையின் நாதமானாள். அவனது கவிதைகளின் கருத்துக்களானாள். வெளியில் யாருக்கும் சொல்லிக்கொள்ளாமலேயே அவர்கள் புதுவாழ்வு புகுந்தார்கள். அவர்கட்குக் குழந்தைகள் பிறந்தன. பேரன்கூடப் பிறந்தான். அவள் அவனை விட்டுப் பின்னர் விலகிவிட்டாள். எனினும் அவன் அவளுக்குத் தந்த உறுதிமொழிப்படி அவளது பெயரை மட்டும் இறுதிவரை வெளியிட மறுத்துவிட்டான்.

புரூக்லினிலுள்ள ஒரு அச்சகத்தில்தான் அவனது உயர் கவிதைகள் நிரம்பிய 'புல்லிதழ்களை' அவன் அச்சிட்டு வெளியிட்டான்.

'புல்லிதழ்களை' உலகம் போற்றித் துதித்து விடவில்லை.

''புல்லிதழ்கள்...'புல்லினை,மண்ணினைகூடப் பெறாது...!

'மனித சமுதாயத்தின் அவமானச் சின்னம்!...'

'குப்பையில் ஊறிய நாற்றம்!...'

— அடுத்த பக்கம் பார்க்க —

அரசியல் நாட்குறிப்பு

★ பிப்ரவரி 20-பொது வேலை நிறுத்தம் பற்றி விளக்கம் கூற தி. மு. க. பொதுச் செயலாளர், என். வி. நடராசன், தோழர் கண்ணதாசன் மூவரும் 12-2-56ம் தேதி இரவு தென்னாட்டுச் சுற்றுப் பயணத்தைத் தொடங்கினார்கள்.

★ பிப்ரவரி 14ல் மாஸ்கோவில் ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி மாநாடு கூடியது. ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு நடைபெறும் சோவியத் கம்யூனிஸ்டுக்கட்சிக் காங்கிரஸ் இப்போது தான் முதல் தடவையாகக் கூடுகிறது.

★ பிப்ரவரி 14ல், இலங்கைப் பிரதிநிதிகள் சபை சுயேச்சை மெம்பரான சி. சுந்தரலிங்கம் தமிழ் மொழி வழங்கும் வாவுநியா தொகுதி உபதேர்தலில் பெருவாரியான ஓட்டுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழ் மொழிக்கு சிங்களத்துடன் சம அந்தஸ்து அளிக்க வேண்டுமென்கிற பிரச்சினையில் தனது தொகுதியில் தேர்தலில் நின்று வெற்றி பெற்றுக் காட்டியது குறிப்பிடத்தக்கது.

★ பிப்ரவரி 15ல் காசி இந்து பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவியை சி. பி. ராமசாமி (அய்யர்) அவர்கள் ராஜினாமா செய்துவிட்டார்.

★ நேருவின் நெருங்கிய நண்பரான வி. கே. கிருஷ்ண மேனன் மத்திய அரசாங்கத்தின் புதிய மந்திரியாக பிப் 14-ம் தேதி பதவி யேற்றார்.

★ ★ ★

சாகாத எண்ணங்கள்...

— முன் பக்கத் தொடர்ச்சி —

'வெம்பலும் அழுகலும் கலந்த படைப்பு!...'

'சாக்கடை உள்ளமுடையவனின் சாவுக்குரல்!...'

'எழுதியவன் பைத்தியக்கார விடுதியிலிருந்து தப்பியோடி வந்து விட்டவன்!...'

இப்படி மட்டுமல்ல இதைவிட மட்டமான கவிதைகளாலேயேகூட அவனைத் தாக்கியது வையம். எனினும் பொறுமையை இழந்துவிடவில்லை விட்மன். மேலும் மேலும் விடாமல் எழுதிக்கொண்டேயிருந்தான். தனது கருத்துக்களை உலகம் எப்படியும் ஒப்புக்கொண்டே தீரும் ஒருநாள் என்ற திட எண்ணத்துடன்.

கால வெள்ளத்தின் ஓட்டம் கொஞ்சம் மாறுதலடையத் தொடங்கியது. விட்மனின் வாழ்வில் சிறிது மாற்றம் எட்டிப்பார்க்க ஆரம்பித்தது. உலகம் தனது மூடிய கண்களைக் குறைந்த அளவு விரித்து அவனைப் பார்த்தது. 'புல்லிதழ்களி'ன் பெருமை பரவத் தொடங்கியது. அறிஞன் ஞானி தோரோ அதைப் படித்துவிட்டு 'ஆயிரம் உபதேசங்களைவிட இப்புத்தகம் மேலானது' என்றான்.

விட்மன் கிழவனாகிக் கொண்டு வந்தான். அவனது புகழ் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவத் தொடங்கியது. 1860-ல் 'புல்லிதழ்கள்' மூன்றாம் பதிப்பு 154 கவிதைகளுடன் வெளி வந்தது.

இரவு பகலெனத் தன்னைக் கவனியாது அவன் செய்த தொண்டு அவனை நோயாளியாக்கியது. தளர்ச்சி அவனைத் தனது நண்பனாக்கிக் கொண்டது. 'புல்லிதழ்கள்' வெளியிட்ட பதிப்பகத்திற்கும் பெருத்த நட்டம் ஏற்பட்டிருந்தது. எனவே உடல்நோயுடன் வறுமை நோயும் வாட்டியது விட்மனை. ஏதாவது வேலை செய்தால்தான் நாட்களை ஓட்டமுடியும் என்னும் நிலை. ஆகவே அவனது நண்பர்கள் சிலர் முயன்று 'இந்தியன் பீரோ' அலுவலகத்தில் குமாஸ்தா வேலை வாங்கித் தந்தனர். அங்கே தான் விடமன் 'புல்லிதழ்களி'ன் ஆசிரியன் என்ற காரணத்திற்காக அலுவலகச் செயலாளனால் வெளியேற்றப்பட்டான். அந்த நிகழ்ச்சியை விட்மனைப் புரிந்திருந்தோர் அனைவரும் கண்டித்தனர்.

விட்மன் தனது இறுதிக் காலத்தைத் தனிமையிலும் அமைதியிலும் கழித்தான். 'மாதிரி நாட்கள்' 'நவம்பர் கொம்புகள்' 'வந்தனம்' 'என் எண்ணம்' முதலிய நூல்களை எழுதினான். பெரும் புகழ்பெற்றான் என்றாலும் 27-3-1892-ல் அவன் சாகும்வரை அவனைத் தூற்றிக் கொண்டேயிருக்கத் தவறவில்லை. சிலர்.

செத்துப்போன விட்மன் உயிரோடிருந்த காலத்தைவிட மிகவும் போற்றப்பட்டான். அவனது நூற்றிருபதாம் ஆண்டு விழாவை வாஷிங்டனில் அவனுக்குச் சிலை செய்து மிகச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தனர் அமெரிக்கர்.

விட்மன் உயிர்க்கவிஞன். உயர் கவிஞன். புதுமைப் புலவன். புரட்சிப் பாவலன். சமுதாயம், மதம் இவை விதித்துள்ள கட்டுகளை அறுத்தெறிந்து சாதாரண மனிதர்களைப் பற்றிப் பாடிய மக்கள் கவிஞன். அவனது கவிதைகள் புதுயுகத்தின் வரவு தெரிவிக்கும் விடிவெள்ளிகள். பழைமையை முறியடிக்கப் பயன்படும் புதுமைக்குரல்கள். விட்மன் மறைந்துவிட்டான். ஆனால்-

'மனிதா! நீ யாருக்கும் தலை வணங்காதே! நிமிர்ந்து நட! கை வீசிச்செல்! உலகைக் காதலி! செல்வச் செருக்கரை, கொடுங்கோல் அரக்கரை, மதவெறியரை ஒதுக்கித் தள்ளி மனச்சாட்சியைத் துணை கொண்டு நட! ஏழைகளிடம் இரக்கம் காட்டு! தொழிலாளருக்கு ஆறுதலளி! பாட்டாளியிடம் பரிவு கொள்! தாராளமாக உதவு! உழைப்பை மதி! ஊருக்கு உதவு! உனக்கு எட்டாத கடவுளைப் பற்றித் தெரிந்ததாகப் பிதற்றாதே!

— என்பன போன்ற அவனது சாகா எண்ணங்களும், அவனது பெரும் புகழும் உலகம் உள்ளளவும் மறையாது என்பதுமட்டும் நிச்சயம்!

—ப. புகழேந்தி

பிப்ரவரி 20!

பொது வேலை நிறுத்தம்

★ தட்சிணப் பிரதேசம் அமைப்பதென்ற கருத்தை அறவே கைவிட்டு மொழிவழி இராஜ்யம் அமைக்கப்பட வேண்டும்.

★ தமிழக எல்லையோரத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு சேர்க்கவும், பிற மொழிப் பகுதிகளை அதனதன் மொழி வழங்கும் இராஜ்யங்களோடு சேர்க்கவும் ஒரு எல்லைக் கமிஷன் நியமித்து ஜனநாயக வழியில் முடிவு செய்ய வேண்டும்.

★ 'சென்னை இராஜ்யம்' என்ற பெயர், 'தமிழ் நாடு' என்று மாற்றப்பட வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளின் பின்னால் தமிழர்கள் ஒருமனதோடு ஒற்றுமையாக நின்று வற்புறுத்துகிறார்கள் என்பதை இந்திய அரசினருக்கும், சென்னை அரசினருக்கும் உணர்த்தும் அறிகுறியாக, பிப்ரவரி 20-ம் நாள் திங்கட்கிழமையன்று பொது வேலை நிறுத்தமும் கடையடைப்பும் (ஹர்த்தால்) நடத்த வேண்டும் என்று சர்வகட்சிக் கூட்டணியால் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எனவே,

தொழிலாளர்களே!	தொழிலதிபர்களே!
ஆசிரியர்களே!	மாணவர்களே!
பணிகள் புரிவோரே!	பத்திரிகையாளர்களே!
அலுவலகம் நடத்துவோரே!	அலுவல்கள் செய்வோரே!
வர்த்தகர்களே!	வண்டிகள் ஓட்டுவோரே!
நாடகம் ஆடுவோரே!	சினிமா நடத்துவோரே!
ஓட்டல்காரர்களே!	நடிகர்களே!

மற்றுமுள்ளவர்களே, நீங்கள் அனைவரும்

பொது வேலை நிறுத்தத்தை

(ஹர்த்தாலை)

பிப்ரவரி 20-ம் நாள் திங்களன்று

வெற்றிகரமாகவும்—சிறப்பாகவும்



அமைதியான முறையில்
பலாத்காரம் தலைகாட்டாமல்
சேதம் விளைவிக்காமல்
யாரையும் துன்புறுத்தாமல்

கட்டுப்பாடுடனும் கண்ணியத்துடனும் நடத்திக்காட்டி, தமிழரின் உரிமையையும் தன்மானத்தையும் நிலைநாட்டும்படி உங்களைப் பணிவுடன் வேண்டிக் கோள்கிறோம்.

பி. டி. ராஜன் (நீதிக் கட்சி)	கே. விநாயகம் (வடக்கெல்லைப் - பாதுகாப்புக் குழு)
கே. சி. சுப்பிரமணியம் ,,	சித்தூர் சீனிவாசன் ,,
சி. என். அண்ணாதுரை (தி.மு.க)	எ. ரத்தினம் (தாழ்த்தப்பட்டோர் -
இரா. நெடுஞ்செழியன் ,,	எம். சுந்தரராஜ் ,, பெடரேஷன்)
என், வி. நடராசன் ,,	கவிஞர் பாரதிதாசன் (புதுவை -
ம. பொ. சிவஞானம் (தமிழரசுக்	மக்கள் முன்னணி)
சின்ன அண்ணாமலை ,, சழகம்)	வி. சுப்பையா ,,
ஜி. உமாபதி ,,	எஸ். சுயம்பிரகாசம் (பார்லி -
ப. ஜீவானந்தம் (கம்யூனிஸ்டுகட்சி)	மெண்டரி கட்சி)
மணலி கந்தசாமி ,,	எம். பி. சுப்பிரமணியம் ,,
எ. எஸ். கே. அய்யங்கார் ,,	வி. வி. இராமசாமி ,,
எஸ்.சி.சி. அந்தோணிபிள்ளை - (சோஷலிஸ்டு)	நாரண. துரைக்கண்ணன் (எழுத்தாளர் சார்பில்)
எம். சின்னசாமி ,,	டி.கே. சண்முகம் (நடிகர் சார்பில்)
பி. எஸ். சின்னதுரை (பிரஜா சோஷலிஸ்டு)	எ. கஜபதி நாயகர்(தமிழர்பேரவை)
எ. சுப்பிரமணியம் ,,	பிள்ளச்சர் (இணைப்புக் கமிட்டி)

—சர்வ கட்சிக் கூட்டணி.

பன்மொழிப் புலவர், கா. அப்பாதுரை, எம். ஏ. எல். டி.

பதில் தருகிறார்

இ. சேகரன், சேன்டிவாக்கம்

1. "செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி னான்றாரோ டொப்பர் நிலத்து" இதற்குத் தெளி வான பதப்பிரிவும் கருத்துரையும் வழங்குக.

2. "கண்டது மன்னுமொரு நாளலர் மன்னுந் திங்களைப் பாம்பு கொண்டற்று" இதன் கருத்து யாது? சந்திரனைப்பாம்பு-விழுங்குவ தாகக் கூறப்படுவதை, வள்ளுவர் உண்மை யென்றே வலியுறுத்து கிறாரா?

3. "தெய்வத்தானாகா தெனினு முயற்சி தன் மெய் வருந்தக் கூலி தரும்"-இக்குறளினை 'முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும் எனி னும் தெய்வத்தான் ஆகாது' என்று மாற்றிப் பொருள் காண லாமா?

1. செவிவழிக் கேட்டு அதன் மூலம் அறிவைப் பெறுபவர் நிலத் தில் வாழ்கின்றவரே ஆனாலும் அவி யுணவை அதாவது படைக்கப்பட்ட உணவை ஏற்கின்ற தேவர்களோடு ஒப்பாவர்.

இக் குறட்பாவுக்கு பரிமேலழக ரும் மற்ற பழைய உரையாசிரியரும் தரும் பொருள் இது புலவர் குழந்தை அவியுணவின் ஆண் டார் என்பதை குறைந்த உண வினையுடைய நிறைந்த அறிவினை யுடையவர் என்று கொள்கிறார். இப்பொருள் சிறப்புடையதே ஏனெ னில் குறைந்த உணவினால் மிகுதி பயன்பெறும் செயலோடு பல கற் றறிந்த புலவர் கேள்வியால் மிகுதி அறிவு பெறுதல் சிறந்த ஒப்புமை யாகும்.

உணவில் என்பதை இரண்டிடத் திலும் உணர்வில் என்று திருத் திப் பாடம் கொள்பவர் உண்டு. இந்தப் பாடத்தால் கிட்டத்தட்ட புல வர் குழந்தையின் பொருளே இயற்கையாக அமைகிறது புல னடக்கி ஆண்டோர் கூறிய உணர் வுடன் மிகுதி கண்டறியும் இயல் புடையவர், கேள்வி அறிவுடைய வரும் அது போலச் சில கேட்டுப் பல அறிபவராவர்.

அவியுணவு எப்படியும் அவி யுணர்வு என்று இருத்தலே சார் புடையது பழைய உரைகாரர் உரை யோடு ஆன்றோர் என்ற சொல் பொருந்தவில்லை. தவிர நிலத்து என்பது பொதுவாக வள்ளுவரால் உலகத்தில் என்ற பொருளில்தான் வழங்கப்படுகிறது.

2. காதலி, காதலனைக் கண் டது ஒரு நாள்தான். ஆனால் அதற் குள்ளே ஊராரின் வம்புச் சொல் அவர்கள் நற்பெயரை ஊரெங்கும் பரப்பித்து மறைத்துவிட்டது இதற்கு காதலி ஒரு உவமை கூறுகிறாள். சந்திரனைப் பாம்பு ஒரு சிறிதே மறைக்கிறது ஆனால் அதன் மூலம் நிலவொளி உலகின் பெரும் பகுதி யில் மறைந்து விடுகிறது.

சந்திரனை மறைப்பது பூமியின் நிழலே; இதை அக்கால வான நூலாரும் அறிந்திருந்தனர் என் பதைச் சங்க நூல்களில் பிற குறிப் புகள் காட்டுகின்றன. ஆயினும் பொது மக்கள் பாம்பு மறைப்ப தாகவே கொண்டனர் வள்ளுவர் உவமை பொது மக்கள், நம்பிக் கையையே இங்கு பயன்படுத்திக் கொண்டது எனல் வேண்டும்.

ஏழு கடல் கொள்கை, புராணம் சார்ந்தது விவிலிய நூலும் (பைபில்) குரானும் இவற்றைக் குறிக்கின்றன. இருபதாம் நூற் றாண்டில் வாழ்ந்த சர்ச்சில் புதிய நில நூல் அறிவு உடையவரானா லும், இலக்கிய மரபை யொட்டி (நம் கப்பல்கள் ஏழு கடல்களிலும் சுற்றுகின்றன) என்று கூறியுள் ளார் வள்ளுவர் பொது வழக்கு மரபும் இது போன்றதே.

3. கூடிய மட்டும் இயற்கை ஒழுங்கு மாற்றிப் பொருள் கொள் வது சிறப்பாகாது என்று நினைக்கி றேம் ஆகவே முயற்சி தன் மெய் வருந்தக் கூலிதரும் எனினும் தெய்வத்தான் ஆகாது என்று மாற்றிப் பொருள் காண்பது நல் லது என்று தோற்றவில்லை. அத் தகைய கருத்தை அல்லது அதனு டன் தொடர்புடைய கருத்தை திரு வள்ளுவர் எங்கும் பயன்படுத்திய தாகவும் தெரியவில்லை.

பரிமேலழகரே தெய்வத்தால் என்பதற்கு பொது மக்கள் இன்று எண்ணுவது போல் கடவுளால் என்று பொருள் கொள்ளவில்லை. பால் வகையால் என்றே பொருள் கொண்டார். பேராசிரியர் வரதராச னார் எளிய நடையில் ஊழின் காரணத்தால் என்று குறிக்கிறார். புலவர் குழந்தையும் ஊழின்படி என்றுதான் உரை எழுதுகிறார்.

ஊழ் என்பதற்கு புலவர் குழந் தையும் கவிஞர் பாரதிதாசனும் உலகியல் நிகழும் முறைமை என்றே விளக்கம் தருகின்றனர்.

ஊழ் என்பது மனிதன் முயற் சிக்கு உதவியாகவோ, தடையாக வோ இயங்கும் சூழ் நிலைப் பண்பு களேயாகும். இவற்றை இயற்கைச் சூழல் ஆற்றல், சமுதாயச் சூழல் ஆற்றல். மரபுச் சூழல் ஆற்றல் என வகுக்கலாம், இம் மூன்றுள் இயற்கை ஆற்றலே பண்டைத் தமி ழில் தெய்வம் என்று குறிக்கப்பட் டது இன்றும் சமஸ்கிருதத்தில் உள்ள பொருள் அதுவே. ஆகவே குறட்பாவில் இடற்பாடு எதுவு மில்லை இயற்கையாற்றலால் ஒரு காரியம் முடியாத காரியமானாலும் கூட, முயற்சி செய்தால் முயற்சி அளவில் பயன்இல்லாமல் போகாது என்பதே திருவள்ளுவர் கருத்து முயற்சியுடையவர் பெரியாராய் இருந்தால் அவர்கள் தெய்வத்தை அதாவது ஊழை வெல்லுவதும் முடியாததன்று இவையே 'ஊழை யும் உப்பக்கம் காண்பார்', 'செயற் கரிய செய்வார் பெரியர்,' என்ற குறட்பாக்கள் மேலும் விளக்கு கின்றன.

நா. வணங்காமுடி, திருவள்ளூர்

1 கவிதை எழுதவேண்டுமானால் இலக்கணம் தெரிந்து இருக்க வேண்டுமா?

2. காவியத்தில் சிறந்த நூல் எது? அதன் ஆசிரியர் யார்? எந்த ஆண்டு?

3 சாதியைப் பற்றி எழுதப்பட்ட நூல்கள் யாவை?

4. கொடையிற் சிறந்த தமிழ் நாட்டுப் புலவர் யார்?

1. கவிதை உணர்ச்சி இசை உணர்ச்சி போன்றது. அதுமட்டு மல்ல. கவிதை மூன்று கலைகளின் இணை ஆகும். ஒன்று இசை யுணர்ச்சி போன்ற ஓசை இன்ப உணர்ச்சி. இன்னொன்று கருத் தழகு உணர்ச்சி. மூன்றாவது உணர்ச்சிகளைத் தூண்டுவது. இம் மூன்றும் அல்லாமல் அவற்றை இணைப்பதும் உருவமைப்பதும் ஓவியக்கலைஞன் திறம் போன்றது. கவிதையின் இவ்வளவு பண்புகளை யும் நுகரும் திறம் வேறு, படைக் கும் திறம் வேறு.

ஆகவே, கவிதை கிட்டத்தட்ட ஐந்து இயல்பான கலைகளின் இணைப்பு ஆகும். ஒவ்வொரு கவிஞனிடம் இவற்றுள் ஏதேனும் ஒரு கூறு இருந்தால் போதும். அவன் உலகில் தலைசிறந்த கவிஞர் களிடையே இடம்பெற்று விடுவான்.

எல்லாக் கலையும் போலவே கவிதையும் தானாக வருவது, மொழி அறிவோ. இலக்கண அறிவோ அதை உண்டுபண்ண ஒரு சிறிதும் உதவாது ஆனால் இயற்கை ஆற்றல் மறைந்திருக்கு மிடத்தில் நல்ல இலக்கியம் அனுப வித்தால் ஆற்றலைத் தூண்டிவிடப் பயன்படும் இவ்வகையில் கூட இலக்கியம் பயன்படுமேயன்றி இலக் கணம் பயன்படாது.

பாட்டை அனுபவிக்கவும் முடி யாத சிலர் இலக்கணம் படிப்பதால் அதை அனுபவிக்கப் பழகிவிடுகின்ற னர். அதன்பின் நாம் மேலே காட்டிய ஐந்து கலைக் கூறுகளில் ஏதேனும் ஒன்று அல்லது பல, அனுபவிப்பவரிடம் இயற்கையாக மறைந்திருந்து அதன் பயனாக அவர் கவி பாடுபவராக அமையக் கூடும் ஆகவே, கொள்கை அள வில் இலக்கணம் கவிதை எழுதப் பயன்படாவிட்டாலும் அனுபவத் தில் பலர் இயற்கைத் திறமையை வெளிப்படுத்த இலக்கணம் பயன் படுவதுண்டு.

சிலர், தாம் எழுதும் கவிதையில் தாமே மயங்கி அதன் தவறுகளை உணர முடியாமல் திருத்தவும் முடி யாமல் இருக்கின்றனர் இலக்கணம் இவர்களுக்குத் தம் கவிதையின் குறைகளை நன்கு எடுத்துக்காட்டும். கவிதையின் சில கூறுகளை நன் குணர இலக்கணம் பெரிதும் பயன் படும் கவிதையில் கலைஞர்களான கம்பர் முதலிய சந்தக் கவிஞர்கள் பாடல்களை இலக்கணத்துடன் படிப் பதால் அவர்கள் பின்பற்றிய கலை நுணுக்கங்களை உணர்ந்து கைக் கொள்ளலாம்.

2. தமிழில் காவியங்கள் எண் ணற்றவை. பலவகைகளில் தனித் தனிச் சிறப்புடையனவே. ஆயினும் அவற்றுள் தலைசிறந்தது நாடகக் காப்பியமாகிய சிலப்பதிகாரமே. அதன் ஆசிரியர் இளங்கோவடிகள் கி. பி. இரண்டாவது நூற்றாண் டைச் சேர்ந்தவர். மணிமேகலை அதே காலத்தது. கூலவாணிகன் சாத்தனாரால். இயற்றப்பட்டது. சிலம்புக்கடுத்தபடி சிறந்தது அதுவே. ஆயினும், பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் ஆகியவையும் தனித்தனிச் சிறப்புப் பண்புகள் உடையவையே.

3. சாதியைப் பற்றி எழுதப்பட்ட நூல்கள் சமஸ்கிருதத்தில்தான் உண்டு. அவையும் ஆரியர் வகுத்த வருணாசிரம முறை பற்றித்தான் கூறுகின்றன. அந்த முறை அடிப் படையான சட்டம் ஒழுக்கங்களை வகுத்துரைக்கும் அந்த நூல் களுக்கு ஸ்மிருதிகள் என்று பெயர்.

ஆங்கிலத்தில் மக்களிடையே நடப்பில் இருக்கும் சாதிகளையெல் லாம் பற்றிய விரிவான வரலாற்று விளக்கம் தர்ஸ்டன் என்பாரின் தென் இந்தியாவில் சாதி குலங்கள் என்ற பாரிய நூல் ஆகும்.

தமிழில் சாதியைக் கண்டித்து எழுதப்பட்ட ஒரே நூல் கபிலர் அகவல். இதை எழுதியவர் சங்க காலக் கபிலரல்லர். ஔவையார், திருவள்ளுவர் ஆகியவர்கள் உடன் பிறந்தவர் என்று கூறிக்கொண்டு அந்தக் கதையின் போர்வையில் சித்தர் பாணியில் சீர்திருத்தக் கருத்துக்களை இந்தப் புலவர் அள்ளி வீசுகிறார்.

பொதுவாக, சித்தர் பாடல்கள் பல, சாதிகளையும் ஆரிய புராண மூடநம்பிக்கைகளையும் பல வேறு வகையில் கண்டிக்கின்றன. சாதியை ஆதரித்த நூல் தமிழில் கிடையாது.

4. புலவர்களிடையே கொடை யில் சிறந்தவர் என்று புகழப்பட்ட வர் கபிலர் ஒருவர்தான்.

★ ★ ★

கல்விபற்றி விவாதம்

கிராமத்துப்புத்திமான் ஐந்தாறு பேர், சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள் அப்போது கல்வியைப்பற்றி ஒரு விவாதம் எழுந் தது. "கல்வியில்லாத மனிதன் அதிருஷ்டக் கட்டை" என்று ஓர் அறிவாளி சொன்னார். அநேகமாக மற்ற எல்லோருமே அதை ஒப்புக்கொண்டார்கள். ஒரே ஒருவர் மாத்திரம் அதை மறுத்தார்.

"நான் என்னமோ அப்படி நினைக்கல்லீங்க. கொஞ்சங்கூட எனக்குப் படிப்பில்லே. படிப்பில்லாதவர்களுக்கு ஒரே ஒரு கஷ் டந்தான் உண்டாகுது. அவங்க தங்க மூளையே உபயோகிக்க வேண்டி வருது; அவ்வளவுதான்" என்றார்.

— ஆலிஸ் ஆட்கின்ஸன், 'தி டைஜஸ்ட் அவ் வொர்ல்ட் ரீடிங்'

★ ★ ★

—6-ம் பக்கத் தொடர்ச்சி —

யின் நினைவலைகள் அமைதி பெற்று எழிலாட்டம் ஆடியது—அவளுக்கு அந்தக் கடிதத்தின் நினைவுதான் இப்போது!

ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கையில் காலத்தைக் கழித்து, அருமைக் குழந்தையின் நோயையும் வளர்த்துவிட்டிருந்த வேணிக்கு இப்போதுதான், புலம்பும் கண்மணியைக் கண்டவுடன், என்ன செய்ய வேண்டும் என்று புரிந்தது. ஏதோ இனம்புரியாத மகிழ்வு அவளுக்கு—அவள் இப்போது அந்தக் கடிதத்தைப் படித்தாள்—அவளது கைகள் ஏனோ நடுங்கின.

''அன்பு வேணி !

அன்று நான் மணப் பந்தலில் ஏங்கி நின்றதை நீ கண்டிருக்க முடியாது! நீதான் நாணி நிலம் நோக்கி நின்றிருந்தாயே! நான் ஒரு துரோகி—அன்றே எனக்குத் தெரியும், வெற்றி பெறாத ஒரு பயணத்தைத் துவங்குகிறேன் என்று. என் கண்ணே! வேணி என்னை மன்னித்து விடு. நான் அன்று உன்னைக் கண்டும் மனம் விட்டுச் சொன்னேன் மணம் வேண்டாமென்று—மறுத்தனர். நான் பெற்ற செல்வம் அந்தக் கொடிய நோய். அதுஎன்னை உன்னோடு வாழவிடாது என்று நன்கு அறிந்துதான் சொன்னேன்...விதி ... ஜோதிடம்...... பூஜா பலன் இப்படி விகார்மான சொற்களைக்கூறி என்னைப்பித்தனுக்கினார்கள். நான்செயலிழந்து மதுரையிலிருந்த அந்த டாக்டரிடம் சென்று என் நிலை கூறினேன். அவரும் திருமணம் கூடாது — கொடியது உனக்கு, என்றார். என்னைச் சேர்ந்தவர்கள் அதையும் மதிக்கவில்லை—ஆண்டவனை மதிப்பதாகக் கூறினார்கள். நான் மறுமுறையும் அந்த நண்பரிடம் உன்னையும் பற்றிக் கூறினேன். பொன்னைப் பாழாக்க விரும்பவில்லை என்று நான் அன்று சொன்னேன்...... அந்த நண்பர் ஆறுதல் சொன்னார் ஆனாலும் பார்ப்போம் என்றுதான் சொன்னார். நான் இந்தக் கடிதம் எழுதும் கடைசி நேரம் வரை என்னை அவரிடம் காட்டவேயில்லை — ஆண்டவனிடமே காட்டிக் கொண்டிருக்கிறார்கள்......

வேணி! ஒன்றுண்டு நான் உணர்வது.......என் முடிவு பரிதாபமானது என்பாய். அதை விடப் பரிதாபமானது உன் முடிவும், உன்னைச் சேர்ந்த அச்செல்வத்தின் முடிவும். ஆனால்... வேணி...நீ...விரும்பினால் உன் வாழ்வு வளம் பெறும். நீ கோரும் எந்த உதவியையும் மறுக்கவே மாட்டார்! அவர் பெயர்......''

முடிவு பெறாத அந்தக் கடிதத்தை அவள் படித்து முடிக்கு முன்பே அவன் விழித்துக் கொண்டான். அவனதுநெஞ்சம் படபட வெனத் துடித்தது—உடல் நெருப்பாகக் காய்ந்தது. செல்வன் அழுதான்—முடியாத நிலையில் புலம்பினான். அப்பாவின் மீது அவன் கொண்ட பாசம், தந்தையைக் காண வேண்டுமென்றஆவல் அவனைச் சிறிது சிறிதாக விழுங்கிக் கொண்டிருந்தது.

'' வேணியம்மா...வேணி...... ஏனம்மா என்னை அழைத்து வரச் சொன்னாயாமே'' வைத்தியர் உத்திராவதி ஆடி அசைந்து, வந்து கொண்டே கேட்டார்.

'' ஆமாம் வைத்தியரே! செல்வனின் நிலை மோசமாகிக் கொண்டே வருகின்றது...... கொஞ்சம்......'' பயந்து பயந்து வேண்டினாள். அரைமணி நேரம் ஏதேதோ சோதித்த வைத்தியர் ஒன்றுமே பேசாது வெளியே சென்றார்......

'' என்ன வைத்தியரே...... ஒன்றுமே பேசாது போகிறீரே?'

''இம்! வேணி! நீ ரொம்பப் பொறுமைசாலி. ஆண்டவன் உன்னைசோதிக்கிறார்...எனக்கு நம்பிக்கையில்லை...'' உதட்டைப் பிதுக்கிவிட்டு வெளியே நடந்தார்.

''அடச் சண்டாளா! இவனும் ஆண்டவனைக் கூப்பிடுகிறானே. அவனுக்கு யாரைக் கூப்பிட வாயிருக்கிறது? கண்ணே செல்வா! நீ சாகத்தான் வேண்டுமா. உன்னை அநியாயமாகக்கொன்று விட்டேனடா நான்...'' அழுதழுது புரண்டாள்.

''வேணி!......''களங்கமற்று, உறுதியோடு கேட்டது அந்தக் குரல்.

''யாரது'' கண்ணீரைத் துடைத்துக் கொண்டே கேட்டாள்.

''ஒன்றுமில்லை.........எல்லாம் கேள்விப்பட்டேன்! இப்போது செல்வனுக்கு எப்படியிருக்கிறது?'' ஆவலோடு கேட்டான் அன்று வந்தவன்—மனோகரன்-அவனைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை அவளால்.

அவளது பதிலை எதிர்பாராதவன் போலவே உள்ளே வந்து குழந்தையைத் தொட்டுத் தொட்டுப் பார்த்தான். ஆம். அவன் ஒரு டாக்டர்! இதை மட்டுமே அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

''டாக்டர்......இப்போது... '' ஆவலோடு, நம்பிக்கையோடு கேட்டாள்.

''பயப்படாதே வேணி! இல்லாத ஒன்றின் மீது ஆசைகாட்டினால் எல்லோரது நிலையும் இப்படித்தான்......'' குனிந்த தலை நிமிராமல் பேசினான் மனோகரன்.

''குணமாகி விடுமா?'' மிகப் பணிவோடு கேட்டாள். அவளையும் அறியாமல் குரல் குழைந்தது.

''என்னை நீ நம்பலாம் வேணி! நான் மனிதன்'' எந்தக் கருத்தில் சொன்னானோ அது அவனுக்குத்தான் புரியும். ஆனால் அவளது உள்ளம் மட்டும் 'ஆம் அவர் டாக்டர்...டாக்டர்' என்று குதூகலித்தது. எவ்வளவு நேரம் அப்படி அந்தக் கடிதத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாளோ தெரியாது; செல்வன் அழைத்ததும் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

'' அம்மா... அம்மா...ஏதும்மா கடுதாசி...அப்பா வர்ரேன்னு எழுதியிருக்காரு அம்மா!'' விழிப்புணர்ச்சியோடுகேட்டான். புதிய தெம்பு பிறந்திருந்தது அவனது குரலில்.

சில்லென்று வீசிய காற்று அவனது சிந்தனையைக் கலைத்தது — நெஞ்சைக் கிளறியது. அவளது நினைவு, அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த டாக்டரும் மனோகரனும் இருவரல்ல, ஒருவரே என்பதை நிலை நிறுத்திக்கொண்டிருந்தது. எட்டப் பரந்த எண்ணம் அவளுக்கு ஏதோ ஒருவித கிளு கிளுப்பை உண்டாக்கியது! என்ன உதவியை இவரிடம் நாடுவது? எதையும் மறுக்க மாட்டாராமே.. ஆம்...ரொம்பநல்லவராகத்தான் இருக்கிறார்.

நம் குழந்தையைக் காப்பாற்றுகிறாரே அதுவே போதும்...இப்படிப் பலவாறாக எண்ணிக் கொண்டிருந்தாள் வேணி.

'' வேணி...வேணி...''

ஆம்! அவரேதான். டாக்டர் தான்.

ஆடையைச் சரி செய்து கொண்டே ஓடிச் சென்று கதவைத் திறந்தாள்.

'' வாருங்கள். செல்வனுக்கு இப்போது தேவலை. ''மனம்விட்டுப் பசினாள் வேணி. மனோகரனுக்கு ஒரே பூரிப்பு. நோயாளி சுகமடையும்போது எந்த டாக்டர் தான் பூரிப்படைய மாட்டார்? அதிலும் இரு நோயாளிகள்!

செல்வன் புரண்டுபடுத்தான்.

''வேணி! தாமரைச் செல்வன் அன்று உன்னைப்பற்றிக் கூறும் போது எனக்குத் தெரியும் அவனது மன நிலை. உன்னை நடுவழியில் விட்டு விடுவோமோ என்று அஞ்சிய அவனுக்கு நான் கூறிய ஆறுதல் மொழிகள் அத்தனையும் வீணாயின வேணி! எனக்கு அவனது நிலை அறிவிக்கப்பட்டிருந்தால் எப்படியும் அவனை மீட்டிருப்பேன்'' தழு தழுத்த குரலில் மனோகரன் இதைச் சொன்னதும் அவளது கண்களிலிருந்து நீர்த்துளிகள் பெருகின.

''அழாதே வேணி! இனி ஆவது ஒன்றுமில்லை'' இப்படி அன்போடு கூறியபடி ஆதரவோடு அவளை நெருங்கினான் மனோகரன்.

அவள் திடுக்கிட்டு ஒதுங்கினாள். நெகிழ்ந்த ஆடையைச் சரி செய்து கொண்டு விலகினாள், காரணம் வேறெதுவுமே இல்லை. செல்வன் அப்போது விழித்துக் கொண்டதைத் தவிர.

''அம்மா...அப்பா வந்துட்டாரும்மா'' வினோதமான கேள்வி. கையில் பிடித்திருந்த அந்தக் கடிதத்தோடு மனோகரனஅவளை ஏறிட்டுப் பார்த்தான்......

'' ஆமாண்டா கண்ணு...... இதோ பார் அப்பா...'' மனோகரனைச்சுட்டிக்காட்டினாள் வேணி. அவளது முகத்திலே இப்போது எவ்வளவு பொலிவு? ஒட்டிய அவனதுஉதடுகளில்தொடர்ந்து முத்தமிட்டாள் வேணி.

''அப்பா......'' தந்தையைக் கண்டவன் மகிழ்வால் உணர்வோடு கத்தினான்,

அவனைத் தூங்கச் செய்வதில் ஏனோ இப்போது அவ்வளவு அக்கறை காட்டினாள் அவள்...?

செல்வன் நன்கு உறங்கினான். கீழ்வானம் வெளுத்துச் சிவந்து இருந்தது—வேணியின் கன்னங்களுக்குப் போட்டியோ?

''நீங்கள் எனக்கும் செல்வனுக்கும் உயிர் கொடுத்த......'' நீட்டினாள் வேணி!

இம் ! ஜாக்கிரதை! நான் டாக்டர்''

வேணி கல கல வென்று சிரித்தாள்.

''சரி...நீ...'' கன்னங்களை வருடியபடியே கேட்டான்.

''நான்......நான் வேணி!'' தெளிந்த குரலில் பேசினாள் அவள்.

''நீ வேணியல்ல! நீ மங்கையர் திலகமம்மா......'' கல கல வென்று சிரித்தார்கள் இருவரும்.

—சோமவர்மன்

★ ★ ★

புள்ளி விவரம்

தென்னாப்பிரிக்கப் பிரதம மந்திரியாக இருந்த ஜெனரல் ஸ்மட்ஸ் ஒரு சமயம் பார்லிமெண்டில் ஒரு விஷயம் பற்றிப் பேச வேண்டியிருந்தது. பிரமாதமான புள்ளி விவரங்களையெல்லாம் சொல்லி, எதிர்க் கட்சியைப் பிரமிக்க வைக்க எண்ணினார். ''எனக்கு இந்தப் புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தா'' என்று காரியதரிசியிடம் சொன்னார்.

''புள்ளி விவரங்களா, ஸார்? இவற்றைத் திரட்ட ஐந்து வருஷம் ஆகுமே!'' என்று ஏங்கினார் காரியதரிசி.

''அப்படியா! சரி, போ'' என்றார் ஸ்மட்ஸ். மிக்க அமைதியாகப் பார்லிமெண்டில் பிரசங்கத்தைச் செய்யத் தொடங்கினார். பிரமாதமான புள்ளி விவரங்களையெல்லாம் சொல்லி, எதிர்க் கட்சியார் திகைக்கும்படி அற்புதமாய்ப் பேசி முடித்தார்.

பின்னால் தனியே இருக்கும்போது காரியதரிசி மெல்ல வந்து, ''ஸார், இந்தப் புள்ளி விவரங்களெல்லாம் உங்களுக்கு எங்கிருந்து கிடைத்தன?'' என்று வியப்புடன் கேட்டார்.

''இதோ பார், அப்பா. இந்தப் புள்ளி விவரங்களைச் சேகரிக்கச் சர்க்காருக்கே ஐந்து வருஷம் ஆகும் என்றால், இவற்றை எதிர்க்கட்சியார் சரிதானா என்று கண்டு பிடிக்கப் பதினைந்து வருஷம் ஆகப்போகிறது......என்ன, நான் சொல்வது தெரிந்ததா?'' என்றார் ஸ்மட்ஸ்.

— ஸாட்டிரிக்கஸ், 'ஆர்கனைஸர்'.

★ ★ ★

வேலங்குடித் திருவிழா

ஆசிரியர் சுற்றுப் பயணத்தில் இருப்பதனால் இந்த இதழில் 'வேலங்குடித் திருவிழா' இடம் பெறவில்லை. அடுத்த இதழில் நிச்சயம் இடம் பெறும்.

கோணல் நினைவுகள் கூட்டிவைத்த கனவுகள்!

நான் நான் என்ற இந்தத் தன்னிலை அமைப்பு பெரும்பாலும் சோகத்தின் சாயலிலே தானே முற்றுப்புள்ளியாகிறது? அப்படி என்னைச் சேர்ந்த எல்லாமே சோக இயல்பாக அமைய நான் எதுவாக இருந்தேன்? நான் எண்ணுகிறேன்...

எண்ணற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பு நான். எவ்வளவு மாபெரும் அனுபவங்கள்......

இரவில், தனிமையில் - பரம்பரை பரம்பரையாக வந்த பழைமையான இந்த வீட்டின் காரை பெயர்ந்த அறையில் நான் எண்ணங்களுடன் மூழ்கியிருந்த வேளையிலே எனக்கு என்னைப் பற்றி நிறைய நிறையப் புலனாகியது.

ஒன்று, இரண்டு என புரட்டுகிறேன். சிதலரித்த ஏடுகள்தான். எனினும் தீப்பிழம்பில் தேன் சுவைக்க விரும்பும் புதிய எண்ணங்கள்!

நான் கோழையாக இருந்தேன். மலரைப் பற்றியும் கனியைப் பற்றியும் அறிய ஆவல்கொண்டு திரிந்தேன்.

எவ்வளவு இருக்கிறது இவ்வுலகில்? காரை பெயர்ந்த பழமையான எனது வீட்டின், பொத்தல் கூரையினிடையிலே பரந்த கருவானத்தில் பார்வையை விட்டேன். 'சந்தால் தரை மெழுகி, சந்தனத்தால் கோலமிட்டு' என்றதுபோல் நிறைய நட்சத்திரத் தூரல்கள்! தொலைதூரத்தில் பாயும்பார்வை...

ஒரு சின்னப்பெண் அவளோடு நான் கொண்ட தொடர்பு, எனது கோழைத்தனம் என்ற கறுப்புச் சொக்கட்டான் காயினால் தோல்வியுற்றதினால் தானே, நான் காணும் பொருள்களிலெல்லாம் கறுப்பின் சூன்யத்தை வீசுகிறேன்.

வானின் கருமையில் நிலைத்த எனது பார்வை, பெயர்ந்தது. ஒரு நட்சத்திரத் துளி உதிர்ந்து சிதறியது...

உறக்கம் வரவில்லை. இரவின் கருமையில் இறங்கி நடந்தால் ஆறுதல் கிட்டுமென்ற நிலை தான் நடக்கத் தென்பட்ட தன்மையில்...

எங்கிருந்தோ ஒரு குழந்தையின் அழுகுரல் காற்றில் மிதந்துவந்தது, முதன் முதலாக 'உலக தரிசனம்' செய்த குழந்தை வீறிட்டு அலறுகிறது. புதிய ஒரு பிறவி தோன்றியிருக்கிறது. துன்பப்படவோ-துயரப்படவோ? பிறப்பு, எப்பொழுதுமே குறிக்கோளின் அடிப்படையில் அமைவதில்லையே...

அந்தப் பிறப்பிற்கு காரணக்காரர்களாகியிருந்த பெற்றோர் மகிழ்ச்சியில் மூழ்கிப்போயிருக்கலாம். அல்லது வேதனையில் தங்களையே மறந்துவிட்டிருக்கலாம்.

நானும் குழந்தையாகவே இருந்துவிட்டிருந்தால், வாழ்க்கை எவ்வளவு அமைதி மிக்கதாக அமைந்திருக்கும்!

என் குழந்தைப் பருவத்தை எண்ணியபோது என் தாயைப் பற்றிய எண்ணம் வருகிறது. இதயம் எண்ணங்களின் சமாதி. காலம் கடந்து அவை திறக்கப் படுகையில் இளித்துக்காட்டும் எலும்புக்கூடு தான் காட்சியளிக்கும் என்ற உண்மையை மறந்து நான், நினைவின் சமாதிகளில் கல்லெறிகிறேன். வேதனையே எனக்கு தீனிப் பொருளாகி விட்டதுபோல. என்னை என் தாய் பெற்றாள் என்னை என் தாய் எப்படிப் பெற்றாள்? பரம்பரையாக வந்த இந்த வீட்டில் எஞ்சியுள்ள ஓலைச்சுவடிகளில்........................

...என் தாய், தகாத முறையில் என்னைப் பெற்றதாக...

தகாதமுறை என்றால், மனிதப் பண்பிற்கு அப்பாற்பட்ட மிருகத் திடன்...அப்படித்தானா பொருள்? அப்படித் தானோ என்னவோ?

என்தாய் துடிப்பும் பொலிவும் மிக்க பருவத்தில், உணர்ச்சிகளுக்கு பலியாகியிருக்கலாம்...நான் அந்த ஓலைச்சுவடிகளை ஆத்திரம் கொண்ட மட்டும் பிய்த்துத் துவைத்து குப்பையில் வீசினேன்.

நேற்று நான் தெருவில் நடந்து வருகையில் சாக்கடையின் ஓரக் கரையில் ஒரு பெண் தன் இரு கைகளிலும் குழந்தை ஒன்றை ஏந்திக் கொண்டு, விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள். நான் அந்தக் குழந்தையை பார்த்தேன். எதிர்கால வீரன்! 'ஐயோ! பாவம்' நான் எண்ணினேன். நான் ஏன் அப்படி எண்ணினேன்? எனக்கு இரக்க சிந்தை உண்டென்று நான் என்னையே ஏமாற்றிக்கொள்வது பேதமைதான். ஏதோ நிறைவேறாத ஆசையின் நீறுபூத்த நெருப்பிலிருந்து தானே 'ஐயோ! பாவம்' என்ற அந்தக் குரல் எழுந்தது?

என்னை விரும்பிய சிறுபெண் என்று சொன்னேனல்லவா, இல்லை நான் ஒரு சிறுபெண்ணை விரும்பினேன் என்று சொன்னேனல்லவா, அந்தப் பெண் எனக்கு, ஒரு குழந்தை பெற்றுத் தரவேண்டுமென்று ஆசையிருந்தது. கடைசியில் அந்த ஆசை சருகாயிற்று. நான் கோழையாக இருந்தேன். அதன்பின் என்முன் அமைந்த எல்லாவற்றையும் வெறுத்தேன்.

எனது இந்த பிரலாபத்தின் கோர்வை குலைந்துபோகிறது. எனக்கு கோணல் நினைவுகள் தான்!

எவ்வளவோ இடங்கள் சுற்றினேன் அடக்கமானவர்கள் - கட்டுக் கடங்காதவர்கள். ஆசாரப் பிரியர்கள். வெறியர்கள், வீணர்கள்... எத்தனையோ ரகம். எனக்கு எவ்வளவு பெரிய அனுபவ அறிவு. எனது அறிவு மாபெரும் அறிவு என நான் அகந்தை கொள்கிறேன்.

என் காலடிகள் தொடாத மண் தரியில்லை என்ற நிலையில் பரம்பரையாக வந்த எனது இந்த பழைய வீட்டிற்கே வந்தடைந்தேன். அருவி மலைமுகட்டிற்கே திரும்பி வந்ததுபோல!

நான் உலகின் மண்தரியையே கிளறிக் கற்றேன் அல்லவா, பயன்-வெறிகொண்ட எண்ணங்கள், உருவானதுதான். அறிவை வெறியின் செவிலித்தாய் என்று சொல்லலாமா?

எல்லோரும் வாழ்வின் வளப்பத்திற்காக ஒருவரையொருவர் விற்றுப் பிழைத்தார்கள். கட்சிகள், கொள்கைகள், மதம், சட்டம், 'அறிவு-போதனைகள். வழிகாட்டிப் பலகைகள் என்ற எண்ணற்ற விற்பனைக் கருவிகள்...வாழ்க்கையையே விற்பனைப் பொருளாக வைத்துக்கொண்ட எத்தனையோ ஜீவன்களை நான் கண்டேன்.

"வாருங்கள்......குறைந்த விலை நிறைந்த நிலை" என்று உடலின் வளப்பத்தை கூறுவைத்துக் கூவும் 'விலைபேசல்' நாடகங்களை நான் கண்டேன்.

"நம்புங்கள் - நாங்கள் காட்டும் பாதை புனிதமானது. இதோ இதை அணிந்து 'முக்தி' பெறுங்கள்" என்ற ஆசாரப் பேச்சுக்கள்...

நான் ஒரு 'சன்மார்க்க'க் கூட்டத்தாரிடையே சிக்கிக்கொள்ள நேர்ந்தது. பொறுக்கமுடியாத ஒரு நிலையில்; "நம்பாதீர்கள், நம்பாதீர்கள். இல்லாத ஒன்றின்மேல் எதற்காக கல்லெறிய வேண்டும்." என்று கேட்டுவிட்டேன்.

பளார் என்று என் கன்னத்தில் ஒரு அடி விழுந்தது. அந்த அடி நான் கொண்ட எண்ணத்தில் அடித்த ஆணியாக அமைந்தது. உறைத்து நின்றுக்கொண்டு, நரம்பின் கடைசி துடிப்பு ஓயுமட்டும் சொல்லிக் காட்டத் தயாராக நின்றேன்...

வாழையடி வாழையாக வந்த எனது இந்த பழைய வீட்டில் மண் மூடிப்போன எனது பழைய தலைமுறையாளர்கள் சிந்தித்துச் சிந்தித்துத் தான் உயிர்விட்டார்களாம். கல்லில் செதுக்கிய சாசனக் குறிப்புகள் சொல்லுகின்றன, அவர்கள் மண்ணிற்கும், பெண்ணிற்கும் வாழ்வை கூறு போட்டுவிட்டு மயானத்தின் அமைதியில் கலந்துபோனார்கள்!

எனக்கு உறக்கம் வரவில்லை. நிலைகளைப் பற்றி எண்ணிப் புழுங்கும் வேளையிலே ஒரு இனிய இசைக்காக என் இதயம் தாகம் கொள்கிறது. புலப்படாத பாதையின் பிரயாணிகளே! உங்களது இனிமையான குரலால் ஒருமுறை பாடி, என்னை உறங்க வைத்துவிட்டுப் போங்கள்...

இசையை நினைத்தபோது நினைவுகள் எதிலோ சென்று தொடுகிறது. "...அன்பரே! நீங்கள் எப்படித் தான் பாடுவீர்களோ, நான் அறியேன். நான் என்றுமே அமைதியாக அந்த இசையை செவிமடுக்கிறேன். உங்களது இசையின் ஒழுக்கு உலகை ஒளி மயமாக்குகிறது. உங்களது இசையின் உயிர்த்துடிப்பு-வானில் ராகக் கீறல்களை - பின்னுகிறது. எனக்கு பேச முடிகிறது. ஆனால், அந்த பேச்சு இசைவடிவாகி மாறாததலால் நான் அழுகை வயப்படுகிறேன். அன்பரே! நீங்கள் உங்கள் இசையின் சுவையில் என் இதயத்தை பிணைத்திருக்கிறீர்கள்!"

நான் கிழித்து காற்றில் வீசிய காகித குடலையில் தான் இந்த பிதற்றல்கள் இருந்தன. எனினும் அவைகள் என் இதயத்தைப்பற்றிக் கொண்டன. நெஞ்சம் நிறைந்த என் எண்ணங்களும் குப்பைப் பொருள்களைப்போல் ஆனதினால் தானா, இந்த குதர்க்கங்கள்?

நான் இசைக்கலைஞனாக இருந்தேன்; இல்லை. வயிறு காய்ந்தபோது தெரிந்த பழைய பாடல்களை முழக்கியவாறு தெருவில் கையேந்தித் திரிந்தேன். தெருவின் அந்திய கோடியில் வந்தபோது; நான் ஒரு இசைக்கலைஞனாக அழைத்துச் செல்லப்பட்டேன். சிரிப்பை மறந்து போயிருந்த எனக்கு சிரிப்பு வந்தது!

நான் என்ற ஒன்று மட்டும் சுத்தமானதும் புனிதமானதும் என்று, நான் எதையும் துப்பிக் காட்டவில்லை.

...அந்தப் பெண் நன்றாகப் பாடுவள். ஆனால் பாட்டைப் பற்றி அறியாதவள். அதனால் தானே எனக்கு கடிதமெழுதினாள்...

பழைமையான இந்த வீட்டில் பல்லிப்பூச்சிகள் பாடும் பாட்டு எனக்கு நினைவு வருகிறது.

நான் ஒரு--வெறுத்து மெலிந்து முன்பல் வெளித்தள்ளிய பெண் ஒருத்தியை விரும்பினேன் அல்லவா-அவள் எனது பரட்டைத் தலைக்கு எண்ணெய் தந்தவள் தான். 'பீடி புகைக்காதே' என்று உபதேசமும் செய்திருக்கிறாள்.

அதெல்லாம் போகட்டும். அவள் எங்கோ தெருவில்...நான் சொல்வது புரிகிறதா?

புரியாவிட்டாலும் பரவாயில்லை. புரியவேண்டாம்...

களைப்பாக இருக்கிறது. உலகம் எல்லாவற்றையும் அறிந்துக் கொண்டு சுற்றுகிறது. வெறியும் விவேகமுமாக போர் நடக்கிறது. யாரேனும் அதை தடைசெய்து விட்டால் தான் நிம்மதி கிட்டும்...

புலவர் காலத்தில் 'உறங்கும் உலகைத் தட்டி எழுப்பு' என்ற ஒரு பாடலையும் 'கோஷித்தவாறு' ஒரு கூட்டம் பிச்சைக்காரர்கள் எனது பரம்பரை பரம்பரையாக வந்த பழமையான இந்த வீட்டின் வாசலில் வந்து நேற்றிரவு பூராவும் உறங்காத என்னை அழைத்தனர்.

நான் அவர்களுக்கு என்னிடம் இருந்தவைகளை கொடுத்துவிட்டு மேலும் பாடுவதற்கென ஒரு பாடலையும் சொல்லிக் கொடுத்தேன். விழித்துக்கொண்டலே கை பாடி உறக்கு!

—ஆ. மாதவன்.

ஜோக்ஸ்

மழை பெய்வது ஏன்?

வீதியில் மழை பெய்வதை ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்த சிறுவனுக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது.

"அம்மா, ஏன் இந்த மழை பெய்கிறது?"

"எல்லாம் வளர்ந்து, நமக்குப் பூ, பழம் யாவும் தர வேண்டும் இல்லையா? அதற்காகத்தான்."

"அப்படியானால், நடைபாதையில் ஏன் பெய்கிறது?"

—லுக்கர்-ஆன்

23. கூடிக் கெடுப்பார் குணம்

வெண்பாப் போட்டி 23ன் பரிசு பெற்ற வெண்பாவையும், பிரசுரத்திற்குத் தகுதியுள்ள வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

★ கத்துகடல் சூழ்நாடன்; கற்புடையோர் வாழ்நாடன்;
செத்தும் புகழ்காக்கும் செந்தமிழன்-சித்தமதில்
தேடி அலைந்தாலும் தென்படா; நஞ்சாகும்
கூடிக் கெடுப்டார் குணம்.

—சு. கந்தசாமி, கருப்பட்டிபாளையம்.

★

மாடியிலே நின்றுஅவள் மான்விழியால் தூதனுப்ப
ஆடி மகிழ்ந்தோமே அன்புறவால்-கூடியே
சர்டி அறுத்தனரே சாதியினல்; சாகாதோ
கூடிக் கெடுப்பார் குணம்!

—பொன்மூத்து, சிவகங்கை.

★

உள்ளொன்று வைத்தல், உதட்டில் உறவாடல்,
கள்ளமிலார் போன்றெதிரே காட்சிதரல்,-எள்ளுநெறி
நாடித் திரிதல், நலமில் இவைநான்கும்
கூடிக் கெடுப்பார் குணம்.

—தமிழ்நெஞ்சன், கரந்தை.

★

நல்லவர்போற் பேசிடுதல் நம்பாற் புறங்கூறல்
அல்லவையே செய்திடினும் ஆமென்றல்-தொல்லையில்
நாடிப் புறத்தே நழுவிவிடல், இன்னவாம்
கூடிக் கெடுப்பார் குணம்.

—இரா. அ. பரமசிவம், பரமக்குடி.

★

நல்லவரைப் போல்நடிப்பார்; நட்புறவு பெற்றிடுவார்;
அல்லலையும் தாமடையார் ஆமைபோல்;-பல்லில்
விடமிருக்கும் பாம்பனையர் வன்னெஞ்சர்; தன்மையே
கூடிக் கெடுப்பார் குணம்.

—மு. அண்ணமலை, சித்தாத்தூர்.

★

கூடுதல் வேண்டுங் குணங்கண்டு நல்லவைதான்
நாடுங்கா லாய்ந்திடலாம் நட்டமில்லை-கேடுறவே
ஆடி யமர்ந்திட்ட அந்தியிலந் தோதெரியும்
கூடிக் கெடுப்பார் குணம்.

—எஸ். ஏ. கனி, மின்னல்.

★

நாட்டைப் புரக்க நமதுயிர் ஈந்துலக
ஏட்டைப் புரட்டுவோம் இன்தமிழா-வேட்டைதான்
ஆடிநிற மாற்றும் அமைச்சரினை நம்புவதோ?
கூடிக் கெடுப்பார் குணம்.

—சி. சுந்தரேசன், அ. நகர்.

★

செந்தமிழுஞ் சந்தனமுந் தென்பொதிகைப் பூங்காற்றும்
விந்தைக் குணமீந்தே வாழுதலாற்-செந்தமிழா
ஓடி மறையுதடா ஒள்பரிதி முன்பனிபோல்
கூடிக் கெடுப்பார் குணம்!

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

★

மாடு பிடித்துவந்தோர் மண்ணுளத் திட்டமிட்டே
நாடு கவிழ்த்த கதையென்ன?-நீடுகேள்
பீடின்றிச் சூழ்ச்சியினற் பேணினர் தானதுவே
கூடிக் கெடுப்பார் குணம்.

—வை. சிவஞானம், வைத்திநாதபுரம்.

நாடாள வேண்டுமென நாள்தோறும் மக்களைத்தான்
வாடாத சொல்மலரால் வாழ்த்தினர்-நாடகமே
ஆடினர், வென்றபின் ஆணவத்தால் பேசுவதே
கூடிக் கெடுப்பார் குணம்.

—சி. பி. சாமி, திருப்பத்தூர்

★

உள்ளே பகைவைத்து ஓயாது பின்தொடர்தல்
நல்லோர்போற் பேசி நடித்திடுதல்-இல்லொன்றைச்
சோடித்துக் கட்டித் துறைமுடித்தல் இம்மூன்றுங்
கூடிக் கெடுப்பார் குணம்.

—ப. கணபதி, சோழபுரம்.

★

செந்தமிழர் நாங்களென்று செப்பிடுவார் ஆனலும்
சிந்தையிலே செத்தமொழி தானிருக்கும்-பைந்தமிழை
மூடி யழிக்க முனைகின்றார் இஃதன்றோ
கூடிக் கெடுப்பார் குணம்.

—மு. தமிழரசு, திருப்புத்தூர்.

★

உடனின்றே கொல்லு முடற்பிணிபோற் றீயோர்
இடர்செய்வர் நல்லோ ரிடையில்-படமெடுத்து
ஆடிக் கடிக்கு மரவத்தின் நஞ்சொக்குங்
கூடிக் கெடுப்பார் குணம்.

—கே. எ. மாதவன், மின்னல்.

★

உயிர்பெரிதென் றெண்ணிடுதல் ஓம்பாமை மானம்
வயிறு வளர்த்தல் வலியார்க்(கு)-எயிற்காட்டி
நாடிநய வஞ்சகத்தால் நல்லவரை வீழ்த்தலிவை
கூடிக் கெடுப்பார் குணம்.

—கு. இரமாதேவி, சென்னை-1

★

திருவளிக்கும் பீர்மேடு தேவிகுளம் மீட்க
ஒருப்பட்டு வந்துபின் ஓடல்-பொருத்தமதோ
நாடி னிவர்தகைமை நஞ்சாகும்; ஆகாதே
கூடிக் கெடுப்பார் குணம்.

—க. வீ. வரதன், அயன்புரம்.

★

வந்தாரின் கால்நக்கி வாழல், வடமொழிகள்
செந்தமிழில் வந்துபுகச் செய்வித்தல்,-மந்தமதி
தேடித் தாலியக்கம் திட்டலிவை நாலுநமைக்
கூடிக் கெடுப்பார் குணம்.

—பொன்னிவளவன், பாவநாசம்.

★

நஞ்சையுள் வைத்தே நடனமிடும் நாகம்போல்
வஞ்சகமுட் கொண்ட வடகதையை-நெஞ்சுவந்தே
நாடிச் சொலும்பண்பே, நற்றமிழர் தங்களுடன்
கூடிக் கெடுப்பார் குணம்.

—வித்துவான் வெங்கடேசன், நெல்லிக்குப்பம்.

★

ஒட்டி யுறவாகி ஊர்க்குழைப்ப னென்றேய்த்துக்
கிட்டரிய வாக்கேற்றுக் கீர்த்திபெறக்-சட்டசபை.
நாடின் மொழியழித்து நாட்டைப் பிறர்க்களித்தல்
கூடிக் கெடுப்பார் குணம்.

—க. வீ. குருசாமி, சென்னை,

★

பிறனில் விழைதல்பின் னின்றிகழ்தல் பாரில்
அறன்பழித்த ஐந்தொழில் ஓம்பல்-நெறியின்றி
நட்டார் பிரித்தலொடு எட்டென்று கூறுவாய்நீ!
கூடிக் கெடுப்பார் குணம்.

—கமலா, சென்னை-11.

★

பொல்லாங்கு அத்தனையும் பூணுகத் தாம்பூண்டு
நல்லார்போ லேநயமாய் நேர்நடித்து-வல்லாரை
வாடித் துயருழக்க வைத்து மகிழ்வதுவே
கூடிக் கெடுப்பார் குணம்.

—வித்துவான் பாவநாசம், சாத்தூர்.

★ பரிசு பெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. ஏ. எம். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.